# ஊழியர் உலகம்

Volume: 16 | Issue: 08 | October 2025 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹ 100 | Single Copy: ₹ 10



நரகத்தை நோக்கிச் செல்லும் ஆத்துமாக்களை
தடுத்து நிறுத்த உன் இருதயத்தில் கேட்கும்
அந்தச் சத்தம் தான் பரம

# அழைப்பு

# வாலிபர் உலகம்




1 ஆண்டுக்கு ரூ.100/-

15 ஆண்டுகளுக்கு ரூ.1000/-

## வாலிபர்களே!

உங்கள் ஆவிக்குரிய வாழ்வில் விழிப்புணர்வையும் மாற்றத்தையும் உருவாக்கும் இந்தப் பத்திரிக்கையை ஒவ்வொரு மாதமும் முழுமையாக வாசித்து, உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்.

வாலிபர் உலகம் பத்திரிக்கைக்கான சந்தா அல்லது காணிக்கை செலுத்திய பின், 9750955547 என்ற எண்ணிற்கு தகவல் அனுப்பி உறுதிப்படுத்தவும். "வாலிபர் உலகம்" மாதாந்திர பத்திரிக்கை தமிழ், ஆங்கிலம், மலையாளம், ஹிந்தி ஆகிய மொழிகளில் வெளியிட்டு வருகிறோம்.

Scan ME

## உள்ளே!



4



14



20



30

JESUS REDEEMS MINISTRIES

இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம், நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.

Phone: 04639-353333 | Cell:9750955547 | E-mail: youth@jesusredeems.org

www.jesusredeems.com | youth.jesusredeems.com

# தலைவாசல்



எனக்கன்பான வாலிபர்களே, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்.

இயேசுவின் அன்பை அறியாத ஒரு கூட்ட வாலிபர்கள் இன்றும் தற்கொலை, போதை, விபச்சாரம், மதுபானம் என்ற சிறையிருப்பில் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். இவர்கள் இயேசுவை அறிய, வாலிபர்களாகிய நீங்கள் எழும்ப வேண்டும்.

ஒருமுறை இங்கிலாந்தில் ராபர்ட் கால்டுவெல், இந்தியாவில் நடைபெறும் மிஷனெரிப் பணியின் அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டிருந்தார். அதை மருத்துவப் படிப்பு படிக்கும் மாணவனான Arthur Margoschis கேட்டவுடனே, இந்தியாவிற்கு மிஷனெரியாகப் போக தன்னை அர்ப்பணித்தார். அந்த அறையில் இருந்தவர்கள், "இப்பொழுது போக வேண்டாம். இன்றும் 6 மாதங்கள் முடிந்து மருத்துவப் பட்டம் வாங்கி, பல வசதிகளோடு இந்தியாவிற்குப் போகலாம்" என்று சொன்னார்கள். அதற்கு Margoschis, "அதற்குள் பல இலட்சக்கணக்கான மக்கள் நரகத்திற்குப் போய்விடுவார்களே!" என்று ஆத்துமப் பாரத்தோடு தன் மிஷனெரிப் பயணத்தை ஆரம்பித்தார்.

அதன் விளைவாக,

- நாசரேத் மக்களுக்கு நற்செய்தி
- பள்ளி மாணவர்களுக்குப் போதுமான கல்வித் தகுதிகள்
- மருத்துவ உதவிகளும், மருத்துவமனைக் கட்டிடமும்
- ஆதரவற்ற குழந்தைகளைப் பாதுகாக்க காப்பகங்கள்
- தொழிற்கல்வி நிறுவனங்கள்
- பெண்களுக்கான தரமான கல்வி

போன்றவற்றைச் செய்து முடித்தார்.

ஒரு தனி மனிதனின் அர்ப்பணிப்பும், அழைப்பிற்குக் கீழ்ப்படிதலும், சமுதாயத்தில் ஒரு பெரிய மாற்றத்தையே கொண்டுவந்தது. நாசரேத்திலே நன்மை பிறக்குமோ என்று எல்லோரும் சொல்லும்போது, தமிழ்நாட்டின் நாசரேத்துக்குத் தன்னையே தந்து, நன்மைகளைச் செய்தவர் Arthur Margoschis.

**இன்றைக்கு நீ வாழும் பட்டணத்தில்**, ஒரு அழுகுரல், ஒரு ஏக்கக் குரல், "யார் எனக்கு நல்வழி காட்டுவார்கள்? நன்மைக்கு நேராக வழிநடத்துவார்கள்?" என்று ஒரு கூட்ட மக்கள் இன்றும் காத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

**இதை வாசிக்கும் வாலிபனே**, தூர தேசத்தில் பிறந்து, "மருத்துவக் கல்வி முடிக்கும் வரை காத்திருக்கமாட்டேன்; ஆத்துமாக்கள்தான் முக்கியம்" என்று தேவனின் அழைப்பிற்கு தன்னை அர்ப்பணித்த Margoschis போல, நீயும் அந்தப் பரம அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து சென்றால், **இயேசுவின் இதயம் மகிழும்; ஒரு சமுதாயம் சீர்பெறும்.**

பரலோக வாசலில் நீ வந்து நிற்கும்போது, உன் மூலம் இரட்சிக்கப்பட்ட ஒரு கூட்டம் உன் பின்னால் வரும்.

**இயேசு எழுந்து நின்று உன்னைப் பார்த்து, "நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்பார்.**



**பரலோகத்தில் அந்தச் சத்தம் அன்று உன் காதில் கேட்க வேண்டுமென்றால், இன்று பூமியில் உன் இருதயத்தில் ஒலிக்கும் இந்தச் சத்தத்திற்குச் செவிகொடு!**

கிறிஸ்துவின் பணியில்
**மோகன் சி. லாசரஸ்**

சாட்சி: தொகுப்பு: வில்லியம்



# முடிவில் தொடக்கம்



கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து, ஆசிரியையாகி நிறைய சம்பாதிக்க வேண்டும் என்ற இலக்குடன் தனது பள்ளிப்படிப்பை முடித்து, தனது 17-வது வயதில் குடும்பப் பொறுப்பையும் தாயின் நோயையும் சுமந்த ஓர் இளம் சகோதரியின் வாழ்க்கையில் தேவன் செய்த மாற்றத்தை அவர்களிடமே கேட்போமா!



## உங்களது குடும்பம் மற்றும் சிறு பிராயம் பற்றிச் சொல்லுங்களேன்?

நான் தமிழ்நாட்டின் தென் மாவட்டத்தில் உள்ள ஒரு கிறிஸ்தவ கிராமத்தில், கிறிஸ்தவ பெற்றோருக்கு ஐந்தாவது மகளாகப் பிறந்தேன். எனக்கு மூன்று அண்ணன்களும் ஒரு அக்காவும் இருக்கிறார்கள். எங்கள் கிராமத்தில் தினமும் காலையிலும் மாலையிலும் ஆராதனை நடைபெறும். இரண்டு ஆராதனைகளிலும் கட்டாயத்தின் பேரிலாவது கலந்து கொள்வேன். வீட்டிலும், பள்ளியிலும், ஆலயத்திலும் என்னை நல்ல பிள்ளை என்றுதான் நினைப்பார்கள். ஆனால், இயேசுவுக்குப் பிடிக்காத நிறைய காரியங்கள் என் உள்ளத்தில் இருந்தன. பல நேரங்களில் ஒரு மாய்மாலமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தேன்.

## நல்ல கிறிஸ்தவ குடும்பம்... ஆலயத்திற்குப் போவீர்கள்... உங்கள் உள்ளத்தில் இயேசு இருந்தாரா?

நான் 4-ஆம் வகுப்பு படிக்கும்போது, எனது **Sunday School Teacher** ஒரு மிஷனெரி சம்பவத்தைச் சொன்னார்கள். அப்போது கண்ணீரோடு, **"இயேசப்பா, நானும் என்னை மிஷனெரியாக ஒப்புக்கொடுக்கிறேன்; ஊழியத்திற்கு என்னை அர்ப்பணிக்கிறேன்"** என்று ஒப்புக்கொடுத்தேன். ஆனால், சோடா பாட்டிலின் நுரை கொஞ்ச நேரத்தில் அடங்கிவிடுவது போல, அந்த அர்ப்பணிப்பும் கொஞ்ச நாட்களில் மறந்துபோனது. 10-ஆம் வகுப்புவரை எங்கள் கிராமத்திலேயே இருந்தேன். அப்பா பணி ஓய்வு பெற்ற பிறகு சென்னைக்குக் குடியேறினோம். +1ல் 63 பேர் படித்த வகுப்பில் நான் மட்டுமே ஆண்டவரை அறிந்த பிள்ளையாக இருந்தும், அவர்களுக்கு முன்மாதிரியாக வாழாமல், அவர்களோடு ஒத்த வேஷம் தரித்தேன். தினமும் சினிமா கதைகளைக் கேட்பேன். அதுவரை நான் சினிமா பார்த்ததோ, பாடல்களைக் கேட்டதோ கிடையாது. ஆனால் +2 வந்தவுடன், நிறைய மதிப்பெண்கள் எடுக்க வேண்டுமே, அதற்கு ஆண்டவர் தான் உதவி செய்ய வேண்டும் என்பதற்காக, **"இனிமேல் சினிமா கதை**



கேட்கமாட்டேன், teacher trainingல் இடம் கிடைத்து விட்டால் ஜெபக்குழு ஆரம்பிப்பேன்; அனேகரை ஆண்டவருக்குள் வழிநடத்துவேன்'' என்று பல தீர்மானங்களை எடுத்தேன்.

**தீர்மானம் எடுத்ததுபோல் நடந்ததா? Teacher Training படித்தீர்களா?**

தேர்வு எழுதி Teacher Training-க்காகக் காத்திருந்த நேரத்தில் B.Sc. Chemistry படிக்க வாய்ப்பு கிடைத்து, Interview-க்குச் செல்ல இருந்தேன். அப்போது ஒருநாள் அம்மா திடீரென்று சரிந்து விழுந்தார்கள். BP, Sugar அதிகமானதால் மூளைக்குச் செல்லும் ரத்தம் உறைந்து, இடது பக்க உறுப்புகள் செயலிழந்துவிட்டதாக டாக்டர்கள் சொன்னார்கள். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்கள். படுத்த படுக்கையாக இருந்த அம்மாவை கவனிக்க வேண்டிய பொறுப்பு, 17 வயது நிரம்பிய என் மீது வந்தது. இயேசப்பா, ''நான் சின்னப் பிள்ளைதானே; ஏன் இவ்வளவு பெரிய பாரத்தை எனக்குக் கொடுத்தீர்கள்?'' என்று அழுவேன். தினமும் 150 சங்கீதத்தையும் முழங்காலில் நின்று, அம்மா காதில் கேட்கும் படி வாசித்து ஜெபிப்பேன். சுமார் மூன்று வாரங்களுக்குப் பிறகு அம்மாவை வீட்டிற்கு அழைத்து வந்தோம்.

குடும்பத்தின் பொறுப்புகள் அதிகமாயின. காலையில் அம்மாவை பல் தேய்க்க வைத்து நுரையை துப்புவதற்கு கப்பு பிடிப்பதிலிருந்து, இரவு வரை அவர்களுக்குரிய எல்லா கடமைகளையும் செய்வதில் சோர்ந்து போனேன். ''என் வாழ்க்கையே நான்கு சுவர்களுக்குள் முடங்கிவிட்டதே; என் படிப்பும் நின்றுவிட்டதே' என்று உள்ளத்திற்குள் கோபமும் எரிச்சலும் வந்தது.



**எதிர்பார்த்த படிப்பைப் படிக்க முடியவில்லை... அதனால் கோபமும் கசப்பும் இருந்தது. அப்படியானால், அம்மாவை கடைசிவரை எப்படி பார்த்துக் கொண்டீர்கள்?**

ஒருநாள் அம்மாவிற்கு வயிறு சரியில்லாமல் போனது. அவரையும், அவருடைய ஆடைகளையும், அந்த இடத்தையும் மூன்று முறை சுத்தம் செய்து விட்டேன். மறுபடியும் அதே போல... எனக்குக் கோபம் வந்தது. சரியாக நடக்க முடியாத அவர்களை பாத்ரூமிலிருந்து கோபத்தோடு கடகடவென்று நடத்தி கைகளை இறுக்கமாக பிடித்து உட்கார வைத்தேன். ''ஐயோ, என் பிள்ளைக்கு நான் பாரமாகிவிட்டேனே'' என்று அவர்களின் கண்களில் கண்ணீர். ஆனால் நான் அதை பொருட்படுத்தாமல் அந்த துணிகளை துவைத்து காய போட்டு விட்டு வீட்டுக்குள் வரும்போது, சுவரில் தொங்கிக் கொண்டிருந்த காலண்டரில், ''நீங்கள் எதைச் செய்தாலும், அதை மனுஷருக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்று நல்மனதோடு செய்யுங்கள்'' (கொலோ. 3:24) என்ற வசனம் என் கண்களில் பட்டது. அந்த வாசற்படியை ஒரு நாளைக்கு 20, 30முறையாவது தாண்டிச் செல்வேன். ஆனால் அந்த நேரத்தில் ஆண்டவர், ''மகளே எபன், அந்த இடத்தில் உன் அம்மா இருப்பதினால்தான் உனக்குக் கோபமும், எரிச்சலும், கசப்பும் வருகிறது; அந்த






இடத்தில் நான் இருக்கிறேன் என்று நினைத்துக்கொள்'' என்று ஆண்டவர் என் உள்ளத்தில் பேசினார். உடனே கண்ணீரோடு ஆண்டவரிடமும் அம்மாவிடமும் மன்னிப்புக் கேட்டேன். ஆணிகள் கடாவப்பட்ட இயேசுவின் கால்களையும், எனக்காகச் சிலுவையைச் சுமந்து சென்ற இயேசுவின் பாதங்களையும் நினைத்து, அம்மாவிற்குப் பணிவிடை செய்தபோது, இனம் புரியாத ஒரு சந்தோஷம் என் உள்ளத்தை நிரப்பியது. அந்தச் சிந்தையோடு காரியங்களைச் செய்ய ஆண்டவர் உதவி செய்தார்.

**உங்களுக்குள் இருந்த கோபமும் கசப்பும் மாறி ஒரு சந்தோஷம் உண்டானது, சரி... அதற்குப் பிறகு உங்களுக்கும் ஆண்டவருக்கும் உள்ள உறவு எப்படி இருந்தது?**

ஒவ்வொரு நாளும் அதிகாலை 3 மணிக்கு ஜெபிக்க எழும்புவேன். நான் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்திருந்தாலும் எனக்கு சில நிமிடங்களுக்கு மேல் ஜெபிக்கத் தெரியாது. ஆனால் அன்றைக்கு இருந்த குடும்ப சூழ்நிலை என்னை அதிகாலை எழும்ப வைத்தது. தனி அறையில் கதவைப் பூட்டி இயேசுவிடம் இவ்வாறு ஜெபிப்பேன், ''இயேசப்பா முழங்கால் போட்டு பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே என்று formala படி ஜெபித்தால் ஐந்து நிமிடத்திற்கு மேல் என்னால் ஜெபிக்க முடியாது. இப்போது ஒன்று செய்கிறேன், இரண்டு பேர் உட்காருகிற அளவுக்கு போர்வையை விரித்துக் கொள்கிறேன். ஒரு பக்கத்தில் நான் உட்காருகிறேன், இன்னொரு பக்கத்தில் நீங்க உட்கார்ந்துக்கோங்க. என் இருதயத்தில் என்னவெல்லாம் கவலையாக இருக்கிறதோ அதை எல்லாம் உம்மிடத்தில் சொல்லுகிறேன் அதுதான் என் ஜெபம் என்று சொன்னேன். உண்மையாய் நான் சொல்ல முடியும்; ஆண்டவர் என் அருகில் அமர்ந்து என் புலம்பலை கேட்டார். சில நேரங்களில் இயேசப்பா உங்க தோள் மீது சாய்ந்து கொள்கிறேன், உங்க மடியில் படுத்து கொள்கிறேன் என்று சொல்லி அருகில் இருக்கிற ஆண்டவர் மேல் சாய்ந்து இருக்கிறேன். என் எதிர்காலத்தை எண்ணி அவரிடம் கண்ணீர் விட்டு அழுது இருக்கிறேன். இவ்வாறு நேரம் போவதே தெரியாத அளவுக்கு ஆண்டவரோடு அமர்ந்திருப்பேன். அதன்பிறகு ஒவ்வொரு வேலை செய்யும்போதும், அதாவது பால் காய்ச்சும் போது ''இந்தப் பால் பொங்குவதைப்போல என் இருதயமும் உம் அன்பினால் பொங்கவேண்டும்'' என்று ஜெபிப்பேன். சப்பாத்திக்கு மாவு பிசையும் போது, சப்பாத்தி மென்மையாக செய்ய வேண்டுமானால், மாவை அழுத்தி, குத்தி, அடித்து பிசைய வேண்டும். அதுபோல என் சுபாவமும் மென்மையுள்ளதாய் மாறும்படி என்னையும் உடைத்து விடும் ஆண்டவரே என ஜெபிப்பேன். பாத்திரத்தைத் தேய்க்கும்போது, ''என் இருதயத்தில் வரும் பாவக்கறைகளையும் தேய்த்து கழுவிவிடும்'' என்று ஜெபிப்பேன். இப்படி, என்னுடைய அன்றாட வேலைகளே என்னுடைய ஜெப நேரமாக மாறியது.



**சூப்பர்... இப்படியும் ஜெபிக்கலாம் என்பதை உங்கள் மூலமாகக் கற்றுக்கொண்டோம்... சரி, உங்களுடைய ஆசிரியர் கனவு என்ன ஆனது?**

என்னுடைய அண்ணன்கள், ‘‘நீ technical courses ஏதாவது படி என்று கூறியதால் மதிய வேளையில் நான் Computer, Hindi, Typing, Short hand மற்றும் Correspondenceல் BA Tamil ஆகியவற்றைப் படிக்க ஆண்டவர் உதவி செய்தார். ஒரே ஒரு long-size notebook-ல் என் அனைத்து படிப்புகளும் இருந்தன. ஒருநாள் class எல்லாம் முடித்துவிட்டு நடந்து வரும்போது, ‘‘நிறைய காரியங்களைப் படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன்; இன்றைக்கு இந்த ஒரு நோட்டுக்குள் என் முழு வாழ்க்கையும் அடங்கிவிட்டதே’ என்று ஆண்டவரிடம் பேசிக்கொண்டே வந்தேன். அப்போது ஏசாயா 55-ஆம் அதிகாரத்தின் மூலம் ஆண்டவர், ‘‘உன் நினைவுகள் என் நினைவுகள் அல்ல; உன் வழிகள் என் வழிகள் அல்ல... உன் நினைவுகளைப்பார்க்கிலும் என் நினைவுகளும், உன் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும் உயர்ந்ததாயிருக்கிறது’’ என்று பேசினார். இந்த வசனத்தை ஒவ்வொரு ஜெபநேரத்திலும் வாசித்து அதை என் கண்ணீரினால் அடையாளமிட்டேன். அந்த வசனம் ஒவ்வொரு நாளும் என்னைத் தேற்றியும் நடத்தியும் வந்தது.

**உங்களுடைய கனவு நிறைவேறவில்லை என்றாலும், ஆண்டவர் உங்கள் மேல் நினைவாயிருக்கிறார் என்பதை அறிந்துகொண்டீர்கள்... உங்களுடைய வாழ்வில் ஏதாவது மாற்றம் நடந்ததா?**

அந்தக் காலகட்டத்தில் குடும்பத்தார் என் திருமணத்திற்காக முயற்சி செய்துகொண்டிருந்தபோது, திடீரென்று அப்பா மாரடைப்பால் இறந்துவிட்டார்கள். செயல்பட முடியாத தாயார், தகப்பனில்லாத சூழ்நிலை என்று கலங்கி நின்றேன். இரண்டு, மூன்று நாட்களுக்குப் பிறகு ஆண்டவரிடத்தில், ‘‘இதுவரை





உங்களை நான் 50% தான் நம்பி இருக்கிறேன், இன்றைக்கு 100-க்கு 100 சதவீதம் உம்மையே நம்புகிறேன் என்று என் எதிர்காலத்தை முழுமையாக ஆண்டவரிடம் ஒப்புக்கொடுத்தேன். அப்பா இறந்த ஆறே மாதத்தில், கிராம மிஷனெரி இயக்கத்தில் மிஷனெரியாக ஊழியம் செய்த மிஷனெரியோடு திருமணக் காரியங்களை ஆண்டவர் ஒழுங்கு செய்தார். என் உடன் பிறந்தவர்கள், உறவுகள் எல்லாரும் இணைந்து ஜெபத்துடன் அனைத்து காரியங்களையும் திட்டமிட்டனர். எனக்கு எல்லார் கண்களிலும் தயவு கிடைத்தது. ஒரு குறைவுமின்றி எல்லாவற்றையும் ஆண்டவர் நேர்த்தியாக நடத்திக்கொடுத்தார்.

**சூப்பர்... திருமணம் முடிந்தது... உங்கள் கணவரோடு இணைந்து ஊழியம் செய்தீர்களா? அல்லது ஆசிரியைப் பணி செய்தீர்களா?**

திருமணத்திற்குப் பிறகு நானும் கிராம மிஷனெரி இயக்கத்தில் இணைந்தேன். ஊழியத்திற்கு வந்தபோது, கிராமங்களில் நாம் சந்திக்கும் பிள்ளைகளைத் தொடர்ந்து வழிநடத்த சபை இல்லாததால், அவர்களுக்குப் புரியும் வண்ணம் எளிய சம்பவங்களோடு வேதாகம சத்தியங்களை விளக்கும் தினதியான இதழை ஆயத்தப்படுத்தும் படி David Ganesan அண்ணன் சொன்னார்கள். ‘‘நான் அப்படி ஒன்று படிக்கவில்லையே; எனக்கு இதெல்லாம் செய்யத் தெரியாதே’ என்றேன். ஆனால் ஆண்டவர், ‘‘நீ படித்த Computer, Typing, Short

**hand, Tamil Literature** எல்லாமே இந்த என் பணிக்காகத்தான்'' என்று உணர்த்தினார். அன்றிலிருந்து ஏறக்குறைய 17 ஆண்டுகளாக ''மோட்சப் பயணம்'' என்ற பத்திரிக்கையை ஆயத்தப்படுத்த ஆண்டவர் உதவி செய்தார். நான் சிறியதாக நினைத்த என் வாழ்க்கையை, ஆண்டவர் ஆயிரக்கணக்கான வாலிபர்களைச் சந்திக்கும் ஊழியமாக மாற்றினார். எங்கள் ஊழியத்தில் அம்மா, அப்பா இல்லாத பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள் என்னை ''**Eben** அத்தை!'' என்று பாசமாக அழைப்பார்கள். பிள்ளைகளால் கைவிடப்பட்ட பெற்றோர்களும் இருக்கிறார்கள். அன்றைய நாட்களில் என் தாயார் மூலம் ஆண்டவர் எனக்குக் கொடுத்த பயிற்சி இன்று **VMM** ஊழியத்தில் இணைந்து குடும்பமாய் ஊழியம் செய்ய உதவியாய் இருக்கிறது.

### திருமணம் முடிந்தது... உங்கள் தாயாரை உங்களோடு வைத்து பார்த்துக்கொண்டீர்களா?

நான் கிட்டத்தட்ட 7 ஆண்டுகள் அம்மாவோடு இருந்தேன். என் திருமணத்திற்கு பின் என்னைவிட அன்பாக என் அம்மாவைக் கவனிக்கும் அண்ணியை ஆண்டவர் கொடுத்தார். அடுத்து பல வருடங்கள் அவர்கள் அம்மாவை அன்போடு கவனித்தார்கள். அம்மா ஆண்டவருடைய ராஜ்யத்திற்குள் பிரவேசித்தார்கள். அவர்களின் கல்லறையில், அவர்கள் விரும்பியபடி, உம்முடைய அடியாளை நன்றாய் நடத்தினீர்'' என்ற வசனம் பொறிக்கப்பட்டுள்ளது.

### வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

நம்முடைய ஆண்டவரைப் போன்ற ஒரு நல்ல தெய்வம் இந்த உலகத்தில் யாருமே கிடையாது. நம் உபத்திரவத்தை அவர் அற்பமாக எண்ணுவதில்லை. எந்தப் பிரச்சனை வந்தாலும் அவரை மட்டும் பற்றிக்கொண்டால், அவர் நடத்துகிற விதத்தை ஒவ்வொரு நாளும் ரசித்துப் பார்க்கலாம். ''ஏன் இந்தப் படிப்பு? ஏன் இந்த மனிதர்கள்? ஏன் இந்த வேலை? ஏன் இந்தச் சூழ்நிலை?'' என்று நமக்குக் கேள்விகள் இருக்கலாம். இன்று நாம் செல்லும் பாதை நமக்கு புரியாவிட்டாலும், ஒரு நாள் ஆண்டவர் இதையெல்லாம் நன்மைக்காகவே செய்தார் என்பதை அறிந்து அவரை மகிமைப்படுத்துவோம். நம்முடைய வழிகளைவிட அவருடைய வழிகள் உயர்ந்தவை. 100% அவரை நம்பி நம் வாழ்வை ஒப்புக்கொடுத்தால், அவர் நடத்துகிற பாதையெல்லாம் நன்மைக்காகவே இருக்கும்.

**அன்பான வாலிபர்களே, வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் சில வேதனைகள், அப்போது முடிவாகத் தோன்றினாலும், அவையே தேவன் வைத்திருக்கும் புதிய தொடக்கமாக மாறுகின்றன. துன்பத்தின் மத்தியில் நம்பிக்கையையும், அன்றாடப் பணிகளில் ஜெபத்தையும் கற்றுக்கொடுத்த தேவன், சகோதரி எபன் சந்தோஷ் அவர்களின் வாழ்க்கையை, ஆயிரக்கணக்கான வாலிபர்களைத் தொடும் ஊழியக்காரியாக மாற்றியிருக்கிறார்.**

**நம் வாழ்க்கையில் ஒரு கதவு மூடப்படுவதை முடிவாக பார்க்காமல்; தேவன் தொடங்கப்போகும் புதிய காரியத்திற்கான தொடக்கமாக பாருங்கள்!**





புதிர்: பிரபா

# வேதாகம புதையல் வேட்டை

**கீழே கொடுக்கப்பட்டுள்ள வட்டத்திற்குள் 20 வேதாகம நபர்கள் பெயர் மறைந்திருக்கிறது. கண்டுபிடி!**




**கடந்த மாத வெற்றியாளர்**
**சகோதரி அருணா, தஞ்சாவூர்**
அவர்களை வாழ்த்துகிறோம்.

பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள்
**15.10.2026**

**கடந்த மாத விடைகள்**

1. தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ
2. தானியேல்
3. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ
4. ஆபிரகாம்
5. அன்பு, விசுவாசம், கீழ்ப்படிதல்
6. யோனத்தான் மற்றும் தாவீது
7. பவுல், பர்னபா
8. அப்போஸ்தலர் 13-14

BIBLE Treasure Hunt

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

# நீ வெட்கப்படுவதில்லை!!

"உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும்" (ஏசா. 61:7).




**மனித வாழ்க்கையில் வெட்கம், அவமானம், தோல்வி, இழப்பு போன்ற அனுபவங்கள் தவிர்க்க முடியாதவை. ஆனால், தேவன் தம்மை நம்புகிறவர்களை அப்படியே விட்டுவிடுவதில்லை. அவர்கள் சந்தித்த வெட்கத்தையும் வேதனையையும் ஆசீர்வாதமாக மாற்றி, இழப்புகளுக்குப் பதிலாக இரட்டிப்பான பலனைக் கொடுப்பார். தேவன் யாருக்கு இரட்டிப்பான பலன் தருவார் என்பதை அறிந்து கேட்கும்போது, அதைப் பெற்றுக்கொள்வது இலகுவாக அமையும்.**

## 1. யார் வெட்கப்பட்டுப் போவதில்லை?

தேவ பிள்ளைகள்!

**"என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை" (யோவேல் 2:26)** என்று கர்த்தர் சொல்கிறார். ஆம், தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறவர்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை.

யார் தேவனுடைய பிள்ளைகள்?

**"இயேசு கிறிஸ்துவைத் தங்கள் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகள்" (யோவான் 1:12).**

நீங்கள் உங்கள் பாவத்தை விட்டு மனந்திரும்பி, ''தேவனுடைய பிள்ளை'' என்ற அனுபவத்தைப் பெற்றிருக்கிறீர்களா? அப்படியானால், கர்த்தர் உங்களை வெட்கப்படவிடமாட்டார். ஒருவேளை நீங்கள் இயேசுவை உங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளாதிருந்தால், இயேசு இன்று உங்களைச் சந்திக்க ஆயத்தமாக இருக்கிறார். எனக்குத் தெரிந்த ஒரு வாலிப மகளுக்கு வயது சென்றுக்கொண்டே இருந்தது. நண்பர்களும், உறவினர்களும், ''திருமணம் எப்போது?'' என்று விசாரிக்கும்போது, அது அவர்களுக்கு மிகுந்த வேதனையாகவும் வெட்கமாகவும் இருந்தது. ''முப்பது வயதிற்கு மேல் இனி யார் திருமணம் செய்து கொள்வார்கள்?'' என்று மற்றவர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் கலங்கிப்போய், என்னிடம் ஜெபிக்க வந்தார்கள். நான் அவர்களுக்கு ஆறுதல் சொல்லி ஜெபித்து அனுப்பினேன். சில நாட்களுக்குள்ளாகவே, ''இப்படியொரு பையன் எப்படி கிடைத்தான்?'' என்று உறவினர்கள் சொல்லும்படியான ஒரு வாழ்க்கையை கர்த்தர் அமைத்துக்கொடுத்தார்.

வெட்கத்திற்குப் பதிலாக இரட்டிப்பான பலன் வந்தது. உங்களுக்கும்

செய்தி: மோகன் சி. லாசரஸ்



இயேசு செய்வார். நீங்கள் அவருடைய பிள்ளையாக இருந்தால், அவர் தம் பிள்ளைகளை வெட்கப்படவிடவே மாட்டார். உங்கள் வேலையில், படிப்பில், குடும்பத்தில் இரட்டிப்பான பலனைக் கொடுப்பார்.

## 2. விசுவாசிக்கிறவர்கள்!

**“இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை” (ரோமர் 10:11).**

**“விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்” (எபி. 11:6).**

இயேசுவிடமிருந்து நீங்கள் எந்த ஆசீர்வாதத்தைப் பெற வேண்டுமானாலும், ‘‘இயேசு கிறிஸ்து எனக்கு இந்த நன்மையைச் செய்வார்’’ என்று விசுவாசிக்க வேண்டும். விசுவாசமில்லாமல் எந்த ஒரு நன்மையையும் இயேசுவிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியாது. அவர் நம்முடைய விசுவாசத்தைக் கனப்படுத்துகிற தேவன். அவரை விசுவாசிக்கிறவர்கள் வெட்கப்பட்டுப் போவதேயில்லை. ஆகவே, உங்கள் விசுவாசத்தை விட்டுவிடாதீர்கள். விசுவாசத்தில் உறுதியாய் இருங்கள்.

இயேசுவை ஏற்றுக்கொண்ட ஒரு சகோதரர், தன் வாழ்க்கையில் சாப்பாட்டிற்கே வழியில்லாத நிலையிலும், ஆண்டவர் மீது வைத்திருந்த விசுவாசத்தை விட்டுவிடவில்லை. ஒவ்வொரு காரியத்திற்கும் இயேசுவை விசுவாசித்து அற்புதங்களைக் கண்டார்.

பள்ளியில் படித்துக்கொண்டிருந்த அவருடைய சிறிய மகனுக்கு இரண்டு ரூபாய் கொடுத்து ஸ்கூல் பேட்ஜ் வாங்கிக்கொடுக்கக்கூட வழியில்லாதபோது, ‘‘எலியாவைக் காகத்தைக் கொண்டு போஷித்தீரே, எனக்கும் அப்படி ஒரு அற்புதத்தை இன்றே செய்யும்!’’ என்று கண்ணீரோடும் விசுவாசத்தோடும் ஜெபித்தார். ஜெபித்து முடித்தபோது, ஒரு காகம் அவர் அருகில் எதையோ போட்டுவிட்டுச் சென்றது. அவர் அதை எடுத்துப் பார்த்தபோது, தன் மகன் படிக்கும் பள்ளியின் அதே ஸ்கூல் பேட்ஜ் இருந்தது.



இரண்டு ரூபாய் மதிப்புள்ள ஒரு சிறிய காரியமாக இருந்தாலும், இயேசுவை விசுவாசித்த அந்தச் சகோதரனுக்கு இது அற்புதமல்லவா? இயேசு கிறிஸ்து, தன்னை விசுவாசித்து, தன்னிடத்தில் ஜெபித்த அந்தச் சகோதரனுடைய விசுவாசத்தைக் கனப்படுத்தினார். தன்னை விசுவாசித்த அந்தச் சகோதரனை ஆண்டவர் வெட்கப்படவிடவில்லை.

ஒரு சிறிய காரியத்தில்கூட ஆண்டவர் இவ்வளவு கவனத்தோடு பதில் கொடுப்பாரானால், நீங்கள் விசுவாசத்தோடு கேட்கிற காரியங்களிலும் அற்புதம் செய்வது எத்தனை நிச்சயம்!

## 3. கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள்!

**“நான் கர்த்தர், எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை” (ஏசாயா 49:23).**

மனிதர்களுடைய வார்த்தைகளை நம்பி, மனிதர்களுக்காகக் காத்திருந்தவர்கள் வெட்கப்பட்டுப் போனதுண்டு. ஆனால், கர்த்தருடைய வார்த்தைகளை விசுவாசித்து, கர்த்தருக்காகக் காத்திருந்தோர் ஒருநாளும் வெட்கப்பட்டுப் போனதில்லை.

கர்த்தர் ஆபிரகாமை வெட்கப்படவிடவில்லை. ஆபிரகாமின் தேவன், நம்முடைய தேவன்! அவர் உங்களுடைய தேவனும் கூட! அவர் உங்களையும் வெட்கப்படவிடமாட்டார். விசுவாசத்தோடும் பொறுமையோடும் காத்திருங்கள்.

மும்பைப் பட்டணத்திற்கு ஊழியத்திற்காகச் சென்றிருந்தபோது, ஒரு தம்பதியினர், ‘‘எங்களுக்குத் திருமணமாகி 22 வருடங்களாயிற்று. எங்களுக்கு ஒரு குழந்தைக்காக ஜெபியுங்கள்’’ என்று கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் இத்தனை வருடங்களாகக் கர்த்தர் மீது வைத்திருந்த விசுவாசமும், அந்த ஆசீர்வாதத்திற்காகக் கர்த்தரை விட்டு விலகாமல் காத்திருந்ததும் எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

‘‘ஆண்டவரே, உமக்குக் காத்திருந்த இந்தப் பிள்ளைகளை வெட்கப்படவிடாதிரும்’’ என்று ஜெபித்து அவர்களை அனுப்பினேன். ஒரு வருடம் கழித்து, நான் ஊழியத்திற்காகச் சென்றிருந்தபோது, கர்த்தர் கொடுத்த குழந்தையோடு வந்து என்னைச் சந்தித்தார்கள்.

**அன்பான வாலிபர்களே!**
**இயேசு கிறிஸ்து எத்தனை நல்லவர்! தமக்காகக் காத்திருந்த பிள்ளைகளை அவர் வெட்கப்படவிடவில்லை.**

**“பயப்படாதே. நீ வெட்கப்பட்டுப் போவதில்லை; வெட்கத்திற்குப் பதிலாக இரண்டத்தனையாகப் பலன் வரும்” என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்கிறார்.**

**இந்த வாக்குத்தத்தம் உங்களுக்குத்தான்! விசுவாசத்தோடு இந்த வாக்குத்தத்தத்தை உங்களுக்குச் சொந்தமாக்கிக்கொள்ளுங்கள்!**

நிகழ்வு: ஜெனிபர்

# அழுத்தத்தின் கீழ்

Hi friends,

எல்லாரும் எப்படி இருக்கீங்க? “அழுத்தத்தின் கீழ்” என்னும் இத்தொடரில் உங்களை மீண்டும் சந்திப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மிகவும் அழுத்தமான சூழ்நிலைகளின் கீழ் உருவாக்கப்படும் எந்தப் பொருளும் அழிந்து போவதில்லை; மாறாக, அது விலைமதிப்பற்றதாக மாறுகிறது.

இந்த மாதமும் மிகவும் அழுத்தமான சூழ்நிலைகளின் கீழ் உருவாக்கப்படும் முத்தைப் பற்றி பார்க்க நீங்கள் ரெடியாக இருக்கீங்களா?

*வாங்க, தொடருக்குள் போகலாம்!*

தேவன் நமக்குத் தந்த விலைமதிப்பற்ற பொக்கிஷங்களில் முத்தும் ஒன்று. இந்த முத்து, உண்மையில், ஓர் எரிச்சல் மிகுந்த சூழலில் இருந்து பிறந்த ஓர் அழகு. ஒரு சாதாரண மணல் துகள்கூட, சிப்பியின் பொறுமையால் லட்சக்கணக்கான மதிப்புள்ள ரத்தினமாக மாறுகிறது.

## அந்நியப் பொருள் உள்ளே நுழைதல்



கடலின் அடியில் வாழும் சிப்பிகள் தங்கள் ஓட்டைத் திறந்து, உணவுக்காகவும் சுவாசிப்பதற்காகவும் நீரை உள்ளே இழுக்கும். அப்போது ஒரு சிறிய மணல் துகள், ஒட்டுண்ணி அல்லது உடைந்த சிப்பித் துண்டு போன்ற ஏதாவது ஓர் அந்நியப் பொருள் சிப்பியின் இரண்டு ஓடுகளுக்கு நடுவில் சென்று விடுகிறது. சிப்பியால் அதை வெளியே துப்ப முடியாது. அந்தப் பொருள் சிப்பியின் மென்மையான உடலில் உரசி, எரிச்சலை ஏற்படுத்துகிறது.

## பாதுகாப்புக் கவசம் அமைத்தல்

இந்த எரிச்சலில் இருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள சிப்பி ஒரு தந்திரத்தைக் கையாள்கிறது. சிப்பியின் உடலில் “மேன்டில் – Mantle” என்ற ஒரு சிறப்புத் தோல் பகுதி உள்ளது. இந்த மேன்டில் செல்கள் அந்த அந்நியப் பொருளை முழுவதுமாகச் சுற்றி, ஒரு பைபோல மூடிவிடுகின்றன. இதனால் அந்தப் பொருள் சிப்பியின் உடலை நேரடியாகத் தொட முடியாமல் போகிறது.



## நாக்கர் அடுக்குகள் படிதல்

மூடி வைக்கப்பட்ட அந்தப் பொருளின் மீது, மேன்டில் செல்கள் "நாக்கர் – Nacre" என்று அழைக்கப்படும் ஒரு பளபளக்கும் பொருளைத் தொடர்ந்து சுரக்க ஆரம்பிக்கின்றன. இந்த நாக்கர்தான் சிப்பியின் ஓட்டின் உட்புறத்தில் இருக்கும் முத்துபோன்ற பளபளப்பான பகுதி.

கால்சியம் கார்பனேட் மற்றும் ஒருவிதப் புரதத்தால் ஆன இந்த நாக்கர், மிக மெல்லிய அடுக்குகளாக ஒன்றன்மேல் ஒன்றாகப் படிகிறது. இந்தச் செயல்முறை மாதக்கணக்கிலும், சில நேரங்களில் 2 முதல் 4 ஆண்டுகள் வரையிலும் தொடரும். அடுக்குகள் எவ்வளவு அதிகமாகப் படிகிறதோ, முத்து அவ்வளவு பெரியதாகவும் பிரகாசமாகவும் இருக்கும்.



## முத்து உருவாதல்

இப்படி ஆயிரக்கணக்கான நாக்கர் அடுக்குகள் சேர்ந்த பிறகு, ஆரம்பத்தில் இருந்த அந்தச் சிறிய மணல் துகள் ஒரு வட்டமான, மென்மையான, ஒளிரும் முத்தாக மாறிவிடுகிறது. ஒளி இந்த அடுக்குகளின் மீது பட்டு திரும்பும்போதுதான் முத்துக்கு அந்தத் தனித்துவமான பிரகாசமும் ஆழமும் கிடைக்கிறது.



10,000 காட்டு சிப்பிகளில், ஒன்றில் மட்டுமே முத்து இருக்கும். அதனால் இது மிகவும் அரிதானதும் விலை உயர்ந்ததுமாகும்.

Friends... நம்முடைய வாழ்க்கையில் வரும் கஷ்டங்களும் பிரச்சனைகளும்கூட, நாம் பொறுமையாகவும் விடாமுயற்சியுடனும் இருந்தால் அழகான அனுபவங்களாக மாறும்.

சிப்பியின் உள்ளே செல்லும் ஒவ்வொரு மணல் துகளும், தேவன் நம்முடைய வாழ்க்கையில் அனுமதிக்கும் கடினமான சூழ்நிலைகளுக்கு ஒப்பானவை. மணல் துகளோ தூசியோ இல்லாவிட்டால், அந்தச் சிப்பிக்குள் முத்து உருவாகி இருக்கவே முடியாது.

அதேபோல, நம்முடைய வாழ்க்கையில் கடினமான சூழ்நிலைகள் இல்லாவிட்டால், நாம் தேவனுடைய கரத்தில் விலைமதிப்பற்ற முத்தாகவும், பிறருக்குப் பயன்படும் பாத்திரமாகவும் மாற முடியாது.

சிப்பியின் மேன்டில் பகுதி கடினமான சூழ்நிலையில் அதை பாதுகாப்பதுபோல, நம்முடைய சோதனை வேளையிலும் நாம் அமிழ்ந்து விடாமல் நம்மைப் பாதுகாத்து, முத்தாக உருவாகப் பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்வார்.

எல்லாச் சிப்பிகளுக்குள்ளும் முத்து உருவாகாது. அழுத்தத்தின் கீழ் செல்லும் சிப்பிகளுக்குள் மட்டுமே முத்து உருவாகிறது.

எனவே, அழுத்தம் ஆபத்தல்ல; மாற்றத்திற்கான ஒரு வாய்ப்பே!

முகப்பு செய்தி: சதீஷ்

# அழைப்பு!!

**தேவனுடைய அழைப்பைப் புரிந்துகொள்வது எப்போதுமே எளிதானது அல்ல. தேவன் தம்முடைய திட்டங்களை இந்தப் பூமியில் நிறைவேற்றுவதற்காக மனிதர்களைத் தெரிந்துகொண்டு அவர்களை அழைக்கிறார். அழைப்பு என்பது ஒரு நபரின் சுய விருப்பத்தினால் உருவாவதில்லை. ஆண்டவர் நமக்குள் உண்டாக்கும் தரிசனமே அழைப்பு ஆகும்.**

எலிசா செல்வச் செழிப்பாக வாழ்ந்தாலும், சும்மா உட்கார்ந்து நேரத்தை வீணாக்கவில்லை. அவன் கடுமையாக உழைக்கும் வாலிபனாக இருந்தான். தேவன் சோம்பேறிகளை அழைப்பதில்லை. ஆண்டவர் உங்களுக்குக் கொடுத்த படிப்பு, வேலை போன்ற பொறுப்புகளில் உண்மையாய் உழைக்கும்போது, ஆண்டவர் உங்களுக்கான கதவைத் திறப்பார். எலிசாவிற்கு தேவனுடைய அழைப்பு அவனைத் தேடி வந்தபோது, அதை அவன் நிராகரிக்கவில்லை. அந்த அழைப்பை அவன் ஏற்றுக்கொண்டான். **“எலியா அவன் இருக்கும் இடம் மட்டும் போய் அவன்மேல் தன் சால்வையைப் போட்டான்”** (1 இராஜா. 19:19). இன்றைக்கும் அநேக வாலிபர்களைத் தேவன் அழைக்கும்போது, அவர்கள் அழைப்பை ஏற்றுக்கொள்ளாமல், தங்கள் சூழ்நிலைகளைக் காரணம் காட்டி ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறார்கள். ஆனால், எலிசா அழைப்பைக் கேட்டபோது தாமதம் செய்யாமல், தேவனுக்காகத் தன்னை அர்ப்பணித்து, தன் பழைய வாழ்க்கையை விட்டுவிட்டு எலியாவைப் பின்தொடர்ந்தான். **“அவன் எலியாவுக்குப் பின்சென்று அவனுக்கு ஊழியம் செய்தான்”** (1 இராஜா. 19:21).



எலிசா அழைக்கப்பட்டு ஊழியம் செய்யும்போது, ஆரம்பத்தில் பெரிய அற்புதங்களைச் செய்யவில்லை. அவன் எலியாவின் கைகளுக்குத் தண்ணீர் ஊற்றுகிற எளிய ஊழியக்காரனாக ஊழியம் செய்தான். அவன் வீட்டில் எவ்வளவு வசதி இருந்தாலும், தேவனுடைய அழைப்பைப் பெற்றபின் தன்னை அந்த அழைப்பிற்கு அர்ப்பணித்துக்கொண்டான். அதனால், ஆண்டவர் அவனை எலியாவைக் காட்டிலும் இரண்டு மடங்கு வல்லமையாகப் பயன்படுத்தினார்.



நீங்கள் உங்களுடைய சூழ்நிலைகளைப் பார்க்காமல், உங்களை அழைத்த தேவனைப் பார்த்தால், உங்கள் அழைப்பில் நிலைத்திருந்து ஆண்டவருக்காக வல்லமையாகச் செயல்படுவீர்கள். ஊழிய அழைப்பு என்பது ஒரு மாபெரும் பொறுப்பு. **“நான் யாரை அனுப்புவேன், யார் நமது காரியமாகப் போவான்?”** என்று தேவன் கேட்டபோது, ஏசாயா தீர்க்கதரிசியைப் போல், **“இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும்”** என்று முழு மனதோடு அர்ப்பணிப்பதே உண்மையான அழைப்பின் ஆசீர்வாதமாகும்.

கடைசிக்கால எழுப்புதல் இந்தியாவிலிருந்து புறப்பட்டுச் சென்று, அது அநேக தேசங்களை அசைக்கப்போகிறது. இந்த எழுப்புதல் திட்டத்தில் ஆண்டவர் உங்களைக் கொண்டு மகிமையான காரியங்களைச் செய்ய உள்ளார். இப்பொழுது நீங்கள் ஆயத்தப்பட்டு, உங்கள் அழைப்பை உறுதி செய்துகொள்ளுங்கள். தேவன் உங்களுக்குக் கொடுக்கும் அழைப்பை அலட்சியமாக விட்டுவிடாதீர்கள்.



எலியா மீது இருந்த அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ள எலிசா வாஞ்சையாய் இருந்தான். எவ்வளவு சோதனைகள் வந்தாலும், அவன் எலியாவைத் தொடர்ந்து சென்று அந்த அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டான். அதுபோல, உங்களுக்கு எவ்வளவு பாவசோதனைகள் வந்தாலும், இயேசுவைத் தொடர்ந்து பிடித்துக்கொண்டு, வாஞ்சையுடன் சென்றால், உங்கள் அழைப்பில் உறுதியாக நிலைத்திருப்பீர்கள்.

**எனக்கு அன்பான வாலிபர்களே, எலிசாவின் அர்ப்பணிப்பும் அழைப்பும் அவனை ஒரு பெரிய ஊழியக்காரனாக மாற்றியது. ஆண்டவர் உங்களை உலகத்தைப் பின்பற்றுவதற்காக அழைக்கவில்லை. இருள் சூழ்ந்த உலகில் நீங்கள் வெளிச்சம் தருவதற்காக அழைக்கிறார். உங்களது இளமை, திறமை, நேரம் அனைத்தையும் தேவனுடைய அழைப்பிற்காகப் பயன்படுத்துங்கள். எலிசாவைப் போல, தேவனுடைய அழைப்பை அலட்சியப்படுத்தாமல், முழு மனதோடு ஆண்டவரின் அழைப்பை ஏற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் கர்த்தருக்கென்று பிரகாசிப்பீர்கள்.!**



# நான் ஏன் சுவிசேஷம் அறிவிக்க வேண்டும்?

## “நான் ஏன் இயேசுவைப் பற்றி மற்றவர்களிடம் சொல்ல வேண்டும்?”

ஒரு வாலிபனிடம் கேட்டால், அவன் இப்படிச் சொல்லலாம்:



**வாலிபன்:** ‘‘இயேசுவைப் பற்றி சொல்லுவதற்கு எவ்வளவோ ஊழியர்கள் இருக்கிறார்களே! அவர்கள் சொல்லட்டுமே! நான் ஏன் சொல்ல வேண்டும்?’’

**நாம்:** ‘‘சரி... அப்படியானால் ஒரு கேள்வி. நீ ஏன் கிறிஸ்துவின் பிள்ளையாக இருக்கிறாய்?’’

**வாலிபன்:** ‘‘இயேசு என்னை நேசிக்கிறார். அவர் எனக்காகச் சிலுவையில் மரித்தார். அவரை விசுவாசிப்பதன் மூலம் இரட்சிப்பைப் பெற்றிருக்கிறேன்.’’

**நாம்:** ‘‘அப்படியானால், உனக்குக் கிடைத்த இந்த இரட்சிப்பைப் பற்றி மற்றவர்களிடம் சொல்ல வேண்டாமா?’’

**வாலிபன்:** ‘‘சொல்ல வேண்டும்... ஆனால் எப்படி சொல்வது?’’

**நாம்:** ‘‘அதுதான் முக்கியம்! சுவிசேஷத்தைச் சொல்ல ஒரு பெரிய ஊழியக்காரராக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. இயேசுவை அறிந்திருக்கிறாய் என்றால், அவரைப் பற்றி மற்றவர்களிடம் சொல்ல ஆரம்பிக்கலாம்.’’

லூக்கா 16:19–31–ல் ஐசுவரியவானையும் லாசருவையும் பற்றி வாசிக்கிறோம். ஐசுவரியவான் மரணத்திற்குப் பிறகு தன் நிலையை உணர்ந்தான். அப்போது தன் சகோதரர்கள் இந்த இடத்திற்கு வராதபடி எச்சரிக்க வேண்டும் என்று விரும்பினான். ஆனால், அவனுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை.

## அப்படியானால், நமக்கு வாய்ப்பு இருக்கும்போதே நாம் ஏன் சொல்லக்கூடாது?



**வாலிபன்:** ‘‘ஆனால், சுவிசேஷம் சொல்ல எனக்கு வாய்ப்பு எங்கே கிடைக்கும்?’’

**நாம்:** ‘‘வாய்ப்பே இல்லையா? உன் பள்ளி அல்லது கல்லூரியில் உன்னுடன் படிக்கும் நண்பர்கள் இருக்கிறார்கள் அல்லவா? அவர்களிடம் சொல்லலாம்.’’

‘‘நீ பயணம் செய்யும் பேருந்து, ரயில், ஆட்டோ போன்றவற்றில் உன்னுடன் பயணம் செய்பவர்களிடம் பேசலாம். உன் வீட்டைச் சுற்றி இருப்பவர்களிடம் கிறிஸ்துவின் அன்பைப் பகிரலாம்.’’

‘‘அவர்களை ஜெபக்கூட்டம், பிறந்தநாள் நிகழ்ச்சி, வாலிபர் கூட்டம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு அழைக்கலாம். Children, Teens, Youth மத்தியில்

நடைபெறும் ஊழியங்களில் Volunteer-ஆகப் பணியாற்றலாம். இயேசுவைப் பற்றி அறியாதவர்களுக்கு Tracts கொடுக்கலாம்.''



**வாலிபன்:** ''ஆனால், எனக்கு வேதாகமத்திலிருந்து சுவிசேஷம் சொல்லத் தெரியாதே!''

**நாம்:** ''பரவாயில்லை. உனக்கு இயேசு என்ன செய்தார் என்பதைச் சொல்ல முடியுமா?''

**வாலிபன்:** ''முடியும்.''

**நாம்:** ''அப்படியானால், அதையே சாட்சியாகச் சொல்! இயேசு உன் வாழ்க்கையில் செய்த மாற்றம் என்ன? அவர் உனக்கு அளித்த ஆறுதல் என்ன? உன் ஜெபத்திற்கு அவர் எப்படி பதில் கொடுத்தார்? இதையெல்லாம் மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்.''

**வாலிபன்:** ''ஆனால்... இயேசுவைப் பற்றி மற்றவர்களிடம் பேச எனக்கு வெட்கமாக இருக்கிறது.''

**நாம்:** ''அப்படியானால், இயேசு சொன்ன வார்த்தையை நினைவில் வைத்துக்கொள்.''

**“என்னையும் என் வார்த்தைகளையும் குறித்து எவனாவது வெட்கப்பட்டால், அவனைக் குறித்து மனுஷகுமாரனும்... வெட்கப்படுவார்.”** — லூக்கா 9:26

**வாலிபன்:** ''அப்படியானால், நான் வெட்கப்படாமல் இயேசுவைப் பற்றி சொல்ல வேண்டும்!''

**நாம்:** ''ஆம்! கிறிஸ்துவை உண்மையாக அறிந்த ஒருவரால் அவரைப் பற்றி சொல்லாமல் சும்மா இருக்க முடியாது. இயேசுவின் அன்பை அனுபவித்திருந்தால், அந்த அன்பை மற்றவர்களிடமும் பகிர்ந்துகொள்ள வேண்டும்.''

அதனால்தான் வேதாகமம் நம்மை இப்படிச் சொல்கிறது:

**“சிலருக்கு இரக்கம்பாராட்டி, சிலரை அக்கினியிலிருந்து இழுத்துவிட்டு, பயத்தோடே இரட்சியுங்கள்”** — யூதா 1:22-23

இன்று உன்னிடம் ஒரு கடைசி கேள்வி:

## உன் வாழ்க்கையில் இயேசுவைப் பற்றி கேட்க வேண்டிய ஒருவர் யார்?



அவரை நினைத்துப் பார்.

அவருக்காக ஜெபி.

அவரிடம் பேசு.

**இயேசுவின் அன்பை அவருக்குச் சொல்.**

**சுவிசேஷத்தைச் சொல்ல ஒரு பெரிய மேடை தேவையில்லை; இயேசுவை அறிந்த ஒரு இதயம் போதும்!**

சிந்திக்க : ரூத்




# தேவனுடைய அழைப்பிற்குக் கீழ்ப்படிந்தவர்கள்

## ஆபிரகாம்

சூழ்நிலை: மெய்த் தேவனை அறியாத குடும்பத்தில் வாழ்ந்து வந்தார்.
நோக்கம்: தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட தேசத்தை உருவாக்குதல்.
கீழ்ப்படிதல்: இலக்கு என்னவென்று தெரியாமலேயே, தன் சொந்த தேசத்தை விட்டுப் புறப்பட்டார்.
வாசிக்க: ஆதி. 12:1—9

## சாமுவேல்

சூழ்நிலை: சிறு பையனாகக் கூடாரத்தில் தூங்கிக்கொண்டிருந்தார்.
நோக்கம்: தேவனுடைய தீர்க்கதரிசியாக இருந்து, இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்துதல்.
கீழ்ப்படிதல்: "சொல்லும், அடியேன் கேட்கிறேன்" என்று பதிலளித்தார்.
வாசிக்க: I சாமு. 3:1—21; 7:15

## தாவீது

சூழ்நிலை: குடும்பத்தில் அனைவராலும் மறக்கப்பட்ட மிக இளைய மகனாக, ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தார்.
நோக்கம்: தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு ராஜாவாக இஸ்ரவேலை ஆட்சி செய்தல்.
கீழ்ப்படிதல்: பரிசுத்த அபிஷேகத்தை ஏற்றுக்கொண்டு, சவுல் ராஜாவுக்கு உண்மையுடன் சேவை செய்தார்.
வாசிக்க: I சாமு. 16:1—13; 2 சாமு. 7:12—16

## பேதுரு

சூழ்நிலை: கலிலேயா கடலில் மீன் வலைகளை வீசிக்கொண்டிருந்தார்.
நோக்கம்: சுவிசேஷத்தை அறிவித்து, மனிதர்களைப் பிடிப்பது.
கீழ்ப்படிதல்: தங்கள் வலைகளையும் படகுகளையும் அந்த இடத்திலேயே விட்டுவிட்டு, இரட்சகரைப் பின்பற்றினர்.
வாசிக்க: மத். 4:18—22

## பவுல்

சூழ்நிலை: கிறிஸ்தவர்களைச் சிறையிலடைக்கவும் துன்புறுத்தவும் தமஸ்குவுக்குச் சென்றுகொண்டிருந்தார்.
நோக்கம்: புறஜாதியாருக்கு சுவிசேஷத்தைச் சுமந்து செல்லுதல்.
கீழ்ப்படிதல்: ஒளியினால் குருடாக்கப்பட்ட பின்னர், இயேசுவுக்கு உடனடியாகக் கீழ்ப்படிந்தார்.
வாசிக்க: அப். 9:1—22; 2 தீமோ. 4:7—8



# தேவனுடைய அழைப்பிற்குக் கீழ்ப்படியாதவர்கள்



## யோனா

**சூழ்நிலை:** இஸ்ரவேல் தேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தீர்க்கதரிசியாக அமைதியான வாழ்க்கை வாழ்ந்து வந்தார்.
**நோக்கம்:** தீய வழிகளில் வாழ்ந்த நினிவே நகர மக்களிடம், அவர்கள் மனந்திரும்ப வேண்டும் என்ற தேவனுடைய செய்தியை அறிவிப்பது.
**கீழ்ப்படியாமை:** தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல், முற்றிலும் எதிர்த் திசையில் இருந்த தர்ஷீஸ் நகருக்குக் கப்பல் ஏறித் தப்பியோடினார்.
**வாசிக்க:** யோனா 1:1–3; 3:1–4

## சிம்சோன்

**சூழ்நிலை:** பிறப்பிலிருந்தே தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு நசரேயனாக, வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிக்க வேண்டிய விரத ஒழுக்கங்களின் கீழ் பிறந்தார்.
**நோக்கம்:** தேவன் கொடுத்த அசாதாரணமான பலத்தின் மூலம் இஸ்ரவேலர்களைப் பெலிஸ்தர்களின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பது.
**கீழ்ப்படியாமை:** தன்னுடைய சொந்த இச்சைகளுக்காகவும் சுய இன்பத்திற்காகவும் தேவனுக்குச் செய்த விரதப் பிரமாணங்களைத் தொடர்ந்து மீறினார்.
**வாசிக்க:** நியாயாதிபதி. 13:1–5; 16:21–31

## சவுல் ராஜா

**சூழ்நிலை:** ராஜாவாக அபிஷேகம் செய்யப்படுவதற்கு முன்பு, காணாமல்போன தன் தந்தையின் கழுதைகளைத் தேடி அலைந்து திரிந்தார்.
**நோக்கம்:** இஸ்ரவேலின் எதிரிகளான அமலேக்கியர்களைத் தோற்கடித்து, அவர்களுடைய உடைமைகள் மற்றும் கால்நடைகள் அனைத்தையும் முற்றிலும் அழிப்பது.
**கீழ்ப்படியாமை:** தேவனுடைய கட்டளையை மீறி, அமலேக்கிய ராஜாவான ஆகாகை உயிரோடு வைத்திருந்தார். மேலும், அங்கிருந்த சிறந்த ஆடு, மாடுகள் மற்றும் பொருட்களை அழிக்காமல் தனக்காக வைத்துக்கொண்டார்.
**வாசிக்க:** 1 சாமு. 15:1–23; 3:1–6

## செல்வந்த வாலிபன்

**சூழ்நிலை:** இயேசு பிரயாணமாகப் போகும்போது, அவரிடம் ஓடிவந்து மண்டியிட்டு, "நித்திய ஜீவனை அடைவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான்.
**நோக்கம்:** தன் செல்வங்களைத் தரித்திரருக்குக் கொடுத்து, சிலுவையை எடுத்துக்கொண்டு இயேசுவைப் பின்பற்றுவது.
**கீழ்ப்படியாமை:** தனக்கு மிகுந்த ஆஸ்தி இருந்தபடியால், இயேசுவின் வார்த்தையைக் கேட்டு மனமடிந்து, துக்கத்தோடே அவ்விடத்தைவிட்டுப் போய்விட்டான்.
**வாசிக்க:** மத். 19:16–22; லூக்கா 18:18–23

## பேலிக்ஸ்

**சூழ்நிலை:** அக்கிரமமும் ஊழலும் நிறைந்த யூதேயாவின் ஆளுநராக, கைதியான பவுலை விசாரிக்கும் அதிகாரியாக வீற்றிருந்தார். **நோக்கம்:** பவுல் பிரசங்கித்த சுவிசேஷத்தைக் கேட்டு, தன் அநீதியான வழிகளைவிட்டு மனந்திரும்பி, கிறிஸ்துவின் மூலமாகக் கிடைக்கும் இரட்சிப்பை ஏற்றுக்கொள்வது.
**கீழ்ப்படியாமை:** நீதியையும் இச்சையடக்கத்தையும் வரப்போகும் நியாயத்தீர்ப்பையும் குறித்து பவுல் பேசினபோது, பேலிக்ஸ் பயந்து நடுங்கி, "இப்பொழுது நீ போ; எனக்குச் சமயம் கிடைக்கும்போது உன்னை அழைப்பிப்பேன்" என்று கூறி, தன் இரட்சிப்பின் முடிவைத் தள்ளிப்போட்டான்.
**வாசிக்க:** அப். 24:24–25

# உயிரைக் கொடுத்த தியாக விதை



"என் தேவனே, நீர் இன்னும் அறியப்படாமல் இருப்பதைக் குறித்து என் இருதயம் எவ்வளவு துயரப்படுகிறது!"

**இந்த வார்த்தைகள், மக்களின் இரட்சிப்பிற்காகத் தன் உயிரையே அர்ப்பணிக்கத் தயாராக இருந்த ஜான் டி பிரெபெ:ப் (Jean de Brébeuf) என்ற மிஷனெரியின் இருதயத்திலிருந்து வந்தவை.**

1593-ல் பிரான்ஸின் நார்மண்டியில் பிறந்த ஜான், அறிவிலும் திறமையிலும் சிறந்தவர். 1617-ல் சபையில் இணைந்து, 1622-ல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். வசதியான வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்காமல், கிறிஸ்துவை அறியாத மக்களிடம் செல்ல வேண்டும் என்ற அழைப்பை ஏற்று, 1625-ல் கனடாவுக்குப் புறப்பட்டார்.



அது எளிதான பயணம் அல்ல. கடுமையான குளிர், பசி, நோய், தனிமை, அறியாத மொழி எனப் பல சவால்கள் அவரைச் சூழ்ந்தன. ஆனால், அவர் பின்வாங்கவில்லை.



ஹூரோன் (Huron) மக்களோடு வாழ்ந்தார்; அவர்களின் மொழியையும் கலாச்சாரத்தையும் கற்றுக்கொண்டார். அவர்களின் மொழியில் இலக்கணம், அகராதி மற்றும் கிறிஸ்துமஸ் பாடலையும் உருவாக்கினார். இதனால் அவர்கள் அவரை **"எச்சோன்"** (பெரும் சுமை தாங்குபவர்) என்று அன்புடன் அழைத்தனர்.



பெரியம்மை நோய் பரவியபோது, மிஷனெரிகளே அதற்குக் காரணம் என்று குற்றம் சாட்டப்பட்டனர். இருந்தாலும், ஜான் நோயாளிகளை விட்டு விலகவில்லை. தொற்றுநோயின் மத்தியிலும் அவர்களைச் சந்தித்து சேவை செய்து, மரணத்தின் விளிம்பில் இருந்தவர்களுக்கு ஆறுதலும் ஞானஸ்நானமும் வழங்கினார். கடுமையான வறட்சி ஏற்பட்டபோது, மிஷன் குடிசையின் மேல் இருந்த சிவப்புச் சிலுவையை அகற்றுமாறு அவரை மிரட்டினர். ஆனால்,





ஜான் மறுத்து, மக்களுடன் சேர்ந்து உண்மையான தேவனிடம் ஜெபித்தார். அவர்கள் ஜெபித்தபோது பலத்த மழை பெய்தது. அவர் ஆயுதத்தால் அல்ல; ஜெபம், பொறுமை மற்றும் அன்பினால் போராடினார்.

ஆண்டுகள் கடந்தன. காடுகள், ஆறுகள், பனிப்பொழிவுகளைக் கடந்து பல கிராமங்களுக்குச் சென்று சுவிசேஷ மையங்களை நிறுவினார். புதிய மிஷனெரிகளிடம், **“இந்த மக்களை நேசியுங்கள்; முறுமுறுக்காதீர்கள்; அவர்களோடு வாழக் கற்றுக்கொள்ளுங்கள்”** என்று அறிவுரை கூறினார்.

**1649 மார்ச் 16.** Iroquois போர்வீரர்கள் ஹூரோன் கிராமத்தைத் தாக்கினர். ஜானும் அவரது சக மிஷனெரியான **கேப்ரியல் லாலெமண்டும்** பிடிபட்டனர். கிறிஸ்துவை மறுதலிக்கச் செய்வதற்காக அவர்கள் கொடூரமாகச் சித்திரவதை செய்யப்பட்டனர். கொதிக்கும் தண்ணீர் ஊற்றப்பட்டது; பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கோடாரிகள் கழுத்தில் தொங்கவிடப்பட்டன. ஆனால், ஜான் தனது விசுவாசத்தை விட்டுவிடவில்லை. இறுதியில், அவர் உயிரோடு எரிக்கப்பட்டு தியாக மரணம் அடைந்தார். அவரது அசாத்திய தைரியத்தைக் கண்டு எதிரிகள்கூட வியந்தனர்.

ஆனால், அவரது கதை அங்கே முடியவில்லை. அவரது தியாகம் புதிய மிஷனெரிகளை எழுப்பியது. ஹூரோன் மக்களிடையே பலர் கிறிஸ்தவ விசுவாசத்தை ஏற்றுக்கொண்டனர். அவரது மொழி மற்றும் கலாச்சாரப் பணிகள் தொடர்ந்து நினைவுகூரப்பட்டன. அவரது தியாகத்திற்குப் பிறகு, பல இளம் மிஷனெரிகள் கனடாவின் காடுகளுக்குள் சுவிசேஷத்துடன் செல்லத் தங்களை அர்ப்பணித்தனர். **1930–ல் அவர் புனிதராக அங்கீகரிக்கப்பட்டார்.**

ஜான், **“எனக்கு என்ன கிடைக்கும்?”** என்று கேட்கவில்லை.

**“கிறிஸ்துவுக்காக நான் இன்னும் என்ன கொடுக்க முடியும்?”** என்று தன் வாழ்க்கையால் காட்டினார்.

நாம் சிறிய சிரமம் வந்தாலே பின்வாங்குகிறோமா? நிராகரிப்பு வந்தால் ஊழியத்தை நிறுத்துகிறோமா? சௌகரியம் இல்லாத இடத்திற்குச் செல்லத் தயங்குகிறோமா?



சாதனை: சுமா கிரேஷன்

# போராடிப் பெற்ற பொற்கனவு!



**அன்பான இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பான வாழ்த்துக்கள்!**
**இன்று நாம் பார்க்கவிருக்கும் சாதனையாளர் அஸ்மிதா தேய் (Asmita Dey). இவர் திரிபுரா மாநிலத்தின் தெற்கு திரிபுரா மாவட்டத்தில் உள்ள பெலோனியா பகுதியைச் சேர்ந்தவர். அவரது தந்தை சைக்கிள் பழுதுபார்க்கும் தொழில் செய்து குடும்பத்தை நடத்தி வந்தார். குடும்பத்தில் மூன்று குழந்தைகளை வளர்ப்பது அவரது தந்தைக்கு எளிதான காரியமாக இருக்கவில்லை. இருப்பினும், சிறுவயதிலிருந்தே அஸ்மிதாவுக்கு விளையாட்டில் அதிக ஆர்வம் இருந்தது.**



அஸ்மிதாவின் விளையாட்டுப் பயணம் ஆரம்பத்திலேயே ஜூடோவில் தொடங்கவில்லை. முதலில் அவர் **800 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில்** பங்கேற்றார். பின்னர் ஜூடோ விளையாட்டை அறிமுகப்படுத்திக்கொண்ட அவர், அதில் தனது முழு கவனத்தையும் செலுத்தத் தொடங்கினார். பொருளாதாரச் சிரமங்கள் இருந்தபோதிலும், அஸ்மிதா தனது விளையாட்டுக் கனவை ஒருபோதும் கைவிடவில்லை. தொடர்ந்து பயிற்சி செய்து, தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்று தனது திறமையை வளர்த்துக்கொண்டார். 2025ஆம் ஆண்டு Casablanca African Open போட்டியில் பெண்களுக்கான 48 கிலோ ஜூடோ பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார்.

அஸ்மிதாவின் வாழ்க்கையில் மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்தது 2026 Glasgow Commonwealth Games தான். பெண்களுக்கான 48 கிலோ ஜூடோ பிரிவில் போட்டியிட்ட அவர், இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். இறுதிப்போட்டியில் கனடாவைச் சேர்ந்த Heidi Quach அவர்களை எதிர்கொண்டார். மிகவும் பரபரப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் இருவரும் சமநிலையில் இருந்ததால், போட்டி Golden Score முறைக்குச் சென்றது. அதில் தீர்மானிக்கும் புள்ளியைப் பெற்று அஸ்மிதா வெற்றி பெற்று தங்கப் பதக்கத்தை வென்றார். இதன் மூலம் Commonwealth Games **ஜூடோவில் இந்தியாவுக்காக தங்கப் பதக்கம் வென்ற முதல் இந்திய ஜூடோ வீராங்கனை** என்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்தார்.



இதை வாசிக்கும் நண்பர்களே! அஸ்மிதாவின் வெற்றிக் கதை அவ்வளவு எளிதாக உருவாகவில்லை. பொருளாதாரச் சிரமங்களையும் வாழ்க்கையில் எதிர்கொண்ட சவால்களையும் கண்டு அவர் ஒருபோதும் சோர்ந்து, தனது பயணத்தை நிறுத்தவில்லை. தொடர்ந்து போராடி, கடினமாக உழைத்து, இன்று வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளார். அவரது தந்தை மறைந்த பின்னரும், அவரது கனவைத் தொடர்ந்து, அஸ்மிதா முன்னேறினார் என்பது அவரது மனவலிமையையும் விடாமுயற்சியையும் வெளிப்படுத்துகிறது.

**இன்று நாமும் முன்னேற முடியாதபடி எத்தனை கடினமான சூழ்நிலைகள் நம்மைச் சுற்றி இருந்தாலும், அஸ்மிதாவின் வாழ்க்கையை முன்மாதிரியாகக் கொண்டு தைரியத்துடன் போராடுவோம். நாமும் நம்முடைய தடைகளைத் தாண்டி, சாதித்து வரலாறு படைப்போம்!**

# வாலிபர் எழுப்புதல் கூடுகை





கடந்த ஜூன், ஜூலை மாதங்களில் சேலம்—ஆத்தூர், ஆந்திர மாநிலம்—சித்தூர், மைசூர், சோழிங்கநல்லூர், ஜெபமாலை, பட்டுக்கோட்டை மற்றும் தாம்பரம் ஆகிய இடங்களில் வாலிபர்களுக்கான எழுப்புதல் கூடுகைகளை நடத்த தேவன் கிருபை செய்தார்.

இதில் சுமார் 1,310 வாலிபர்கள் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள். சகோ. சாம் ஜெபராஜ், சகோ. அன்னாஷ் மற்றும் சகோ. காலேப் ஆகியோர் தேவ செய்தியைப் பகிர்ந்து, வாலிபர்களுக்காக ஜெபித்தார்கள். தேவ ஊழியர்களைத் தேவன் வல்லமையாகப் பயன்படுத்தினார்.

இக்கூட்டங்களில் பங்குபெற்ற வாலிபர்களைப் புதிய அக்கினி அபிஷேகத்தினால் நிரப்பி, அவர்கள் எழுப்புதலை பரவச்செய்கிறவர்களாக தங்கள் இடங்களுக்கு திரும்பிச் செல்லும்படி தேவன் கிருபை செய்தார்.

**தேவனுக்கே மகிமை!**



சிறப்பு கட்டுரை: ராகேஷ்

# ஒநேசிபோரு பேசுகிறேன்...

## அறிமுகம்

இன்றைய தலைமுறையில் தேவனுடைய ஊழியக்காரர்கள் பலர் தனிமை, எதிர்ப்பு, துன்பம், மனச்சோர்வு ஆகியவற்றை எதிர்கொண்டு வருகின்றனர். சிலர் அவர்களை ஆதரிக்கப் பயப்படுகிறார்கள்; சிலர் தங்களுடைய பாதுகாப்பையும் சௌகரியத்தையும் மட்டுமே நாடுகிறார்கள்.

ஆனால், என் வாழ்க்கை ஒரு உண்மையை அறிவிக்கிறது. பெரிய மேடைகளில் பிரசங்கிப்பதைக் காட்டிலும், சோர்ந்துபோன தேவ ஊழியர்களை ஊக்கப்படுத்துவதும், அவர்களுடன் நின்று அவர்களுக்கு உதவுவதும் தேவனுடைய பார்வையில் மிகவும் மதிப்புமிக்க ஊழியமாகும். என் சாட்சி உங்களையும் உண்மையுள்ள ஊழியராக வாழத் தூண்ட வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்.

## என்னைப் பற்றி

நான் ஒநேசிபோரு. வேதாகமத்தில் என்னைப்பற்றி சில வசனங்கள் மட்டுமே எழுதப்பட்டுள்ளன. ஆனால், என் வாழ்க்கையும் ஊழியமும் தேவனுடைய வார்த்தையில் நிலைத்திருக்கும்படி அவர் விரும்பினார். மனிதர்கள் மறந்தாலும், தேவன் உண்மையுள்ள சேவையை ஒருபோதும் மறப்பதில்லை.

''கர்த்தர் ஒநேசிபோருவின் வீட்டாருக்கு இரக்கம் அருளுவாராக; அவன் அநேகமுறை என்னை ஆறுதல்படுத்தினான்; என் சங்கிலிகளுக்காக வெட்கப்படவில்லை'' (2 தீமோ. 1:16).

## நான் வாழ்ந்த காலம்

நான் வாழ்ந்த காலத்தில், அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவுக்காகச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அவருடன் இருப்பது ஆபத்தானதாக இருந்ததால், பலர் அவரைவிட்டு விலகினர். ''ஆசியாவில் உள்ள எல்லாரும் என்னைவிட்டு விலகினார்கள்'' (2 தீமோ. 1:15).

பயம் பலருடைய விசுவாசத்தைப் பலவீனப்படுத்தியது. ஆனால், அந்த நேரத்தில் தேவன் எனக்கு உண்மையான அன்பையும் விசுவாசத்தையும் செயல்படுத்தும் வாய்ப்பைக் கொடுத்தார்.

## என் ஊழியம்

பவுல் ரோமாபுரியில் சிறையில் இருப்பதாக அறிந்தவுடன், நான் அமைதியாக வீட்டில் இருக்கவில்லை. அவரைக் கண்டுபிடிக்க ரோமாவுக்குச் சென்றேன். எளிதில் அவரைக் கண்டுபிடிக்க முடியாதிருந்தாலும், விடாமுயற்சியுடன் தேடினேன். பவுல் என்னைக் குறித்து இவ்வாறு சாட்சி கூறுகிறார்: ''ரோமாபுரிக்கு வந்தபோது மிகவும் ஜாக்கிரதையாய்த் தேடி என்னைக் கண்டுபிடித்தான்'' (2 தீமோ. 1:17). தேவனுடைய ஊழியக்காரரைத் தேடி, அவருக்கு உதவுவது என் வாழ்க்கையின் முக்கியமான ஊழியமாக இருந்தது.

## என் குணாதிசயங்கள்

### 1. நான் தேவனுடைய ஊழியக்காரரை அடிக்கடி ஆறுதல்படுத்தினேன்

மனமுடைந்தவர்களை உற்சாகப்படுத்துவது ஒரு மகத்தான ஊழியம். சோர்ந்துபோன தேவ ஊழியர்களுக்கு விமர்சனத்தைவிட ஆறுதலே இந்த நாட்களில் அதிகமாகத் தேவைப்படுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார்: ''அவன் அநேகமுறை என்னை ஆறுதல்படுத்தினான்'' (2 தீமோ. 1:16).

### 2. நான் பவுலின் சங்கிலிகளுக்காக வெட்கப்படவில்லை

பலர் பவுலைவிட்டு விலகியபோது, நான் அவருடன் நின்றேன். மனிதர்களின் கருத்துகளைவிட, தேவனுக்கான உண்மையையே நான் அதிகமாக மதித்தேன். ‘‘என் சங்கிலிகளுக்காக அவன் வெட்கப்படவில்லை’’ (2 தீமோ. 1:16).

### 3. நான் விடாமுயற்சியுடன் சேவை செய்தேன்

உண்மையான ஊழியத்திற்கு முயற்சியும் தியாகமும் தேவைப்படுகிறது. சிரமம் இருந்தாலும், நான் தேடுவதை நிறுத்தவில்லை. ‘‘மிகவும் ஜாக்கிரதையாய்த் தேடி என்னைக் கண்டுபிடித்தான்’’ (2 தீமோ. 1:17)

### 4. நான் தொடர்ந்து ஊழியம் செய்தேன்

என் ஊழியம் ரோமாவில் மட்டும் நின்றுவிடவில்லை. எபேசுவிலும் நான் தொடர்ந்து ஊழியம் செய்தேன். இடைவிடாத உண்மையுள்ள சேவையே தேவனுக்குப் பிரியமானது. பவுல் தீமோத்தேயுவிடம் இவ்வாறு கூறுகிறார்: ‘‘எபேசுவிலே அவன் எவ்வளவாய் ஊழியம் செய்தான் என்பதை நீ நன்றாய் அறிந்திருக்கிறாய்’’ (2 தீமோ. 1:18).

## என் குடும்பத்தின் மேல் தேவனுடைய ஆசீர்வாதம்

ஒரு மனிதனின் உண்மையுள்ள ஊழியம் அவனுடைய குடும்பத்தினருக்கும் ஆசீர்வாதமாக அமைகிறது. தேவன் தம்மைத் தேடுகிறவர்களின் உழைப்பை மறப்பதில்லை. பவுல் என் குடும்பத்திற்காக இவ்வாறு ஜெபித்தார்: ‘‘கர்த்தர் ஒநேசிபோருவின் வீட்டாருக்கு இரக்கம் அருளுவாராக’’ (2 தீமோ. 1:16)

## என் வாழ்க்கை கற்பிக்கும் ஐந்து பாடங்கள்

- தேவனுடைய ஊழியக்காரர்களை ஆறுதல்படுத்துவது ஒரு உயர்ந்த ஊழியம். (2 தீமோ. 1:16)
- துன்ப நேரத்தில் உறுதுணையாக இருப்பவர்களே உண்மையான நண்பர்கள். (2 தீமோ. 1:16–17)
- ஊழியத்திற்கு தியாக மனப்பான்மை அவசியம். (2 தீமோ. 1:17)
- சிறிய சேவைகளையும் தேவன் மறப்பதில்லை. (எபி. 6:10)
- தொடர்ந்து செய்யப்படும் ஊழியம் நித்திய பலனைத் தருகிறது. (2 தீமோ. 1:18)

## Gen Z & Alpha தலைமுறைக்கு என் செய்தி

இன்று பலர் மேடையை விரும்புகிறார்கள்; ஆனால் சேவையை விரும்புவதில்லை. பாராட்டை விரும்புகிறார்கள்; ஆனால் தியாகத்தை விரும்புவதில்லை.

## நீங்கள் அப்படிப்பட்டவர்களாக இருக்காதீர்கள்!

தேவனுடைய ஊழியக்காரர்கள் சோர்வடையும்போது அவர்களை உற்சாகப்படுத்துங்கள். அவர்களுக்காக ஜெபியுங்கள். அவர்களைச் சந்தியுங்கள். அவர்களுடன் நின்று உதவுங்கள். அவர்கள் துன்பப்படும்போது அவர்களை விட்டு விலகாதீர்கள். பரிசுத்த வேதாகமம் இப்படிக் கூறுகிறது: ‘‘ஒருவருக்கொருவர் பாரங்களைச் சுமந்து, இப்படியே கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்.’’ (கலாத்தியர் 6:2) உற்சாகப்படுத்தும் ஊழியம் தேவனுடைய ராஜ்யத்தில் மிகவும் உயர்ந்த ஊழியமாகும்.

### முடிவுரை

என் பெயர் பரிசுத்த வேதாகமத்தில் சில இடங்களில் மட்டுமே காணப்படுகிறது. ஆனால், என் உண்மையுள்ள ஊழியத்தைப் பற்றி பவுல் மறக்கவில்லை. அவர் இவ்வாறு ஜெபித்தார்: ‘‘அந்நாளிலே கர்த்தரிடத்தில் இரக்கம் பெறும்படி கர்த்தர் அவனுக்குக் கிருபை அருளுவாராக.’’ (2 தீமோ. 1:18)

### என் வாழ்க்கையின் செய்தி மிகவும் எளிமையானது:

- உண்மையுள்ளவர்களாய் இருங்கள்!
- சோர்ந்துபோனவர்களை ஆறுதல்படுத்துங்கள்!
- தேவனுடைய ஊழியக்காரர்களோடு நின்று அவர்களை ஆதரியுங்கள்!
- யாரும் காணாவிட்டாலும், தேவன் காண்கிறார்!

‘‘உங்கள் கிரியையையும், பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்ததையும் இன்னும் செய்கிறதையும், தம்முடைய நாமத்திற்காக நீங்கள் காண்பித்த அன்பின் பிரயாசத்தையும் தேவன் மறப்பதற்கு அநீதியுள்ளவர் அல்ல’’ (எபி. 6:10). என்னைப்போன்ற மற்றொரு ஒநேசிபோருவாக நீங்கள் மாற வேண்டும் என்பதே என் விருப்பம். உலகம் உங்களை அறியாவிட்டாலும், தேவன் உங்களை அறிந்திருக்கிறார். உங்கள் உண்மையுள்ள ஊழியத்தை அவர் மறப்பதில்லை; அதை நித்தியத்தில் நினைவுகூருவார்.

# CAREER Guidance

## வீடு / Hostel-ல் இருந்து UPSC தேர்வுக்குத் தயாராவது எப்படி?

UPSC தேர்வுக்குத் தயாராகும் மாணவர்கள் வீட்டிலிருந்தோ அல்லது Hostel-ல் இருந்தோ படிக்கலாம். இடத்தைவிட, நாம் பின்பற்றும் ஒழுக்கமும் தொடர்ச்சியான முயற்சியுமே முக்கியம்.

### வீட்டிலிருந்து படிப்பவர்கள்

- **பலன்கள்:** குடும்ப ஆதரவு, நல்ல உணவு, பாதுகாப்பான சூழல்.
- **சவால்கள்:** பயண நேரம் மற்றும் வீட்டிலுள்ள distractions.

#### சிறந்த வழிமுறை:

- காலை 1–2 மணி நேரம் படிக்கவும்.
- பயண நேரத்தை Current Affairs-க்கு பயன்படுத்தவும்.
- இரவில் 2–3 மணி நேரம் focused study செய்யவும்.
- வார இறுதியில் Revision + Mock Test செய்யவும்.
- Mobile மற்றும் தேவையற்ற distractions-ஐ கட்டுப்படுத்தவும்.

### Hostel-லிருந்து படிப்பவர்கள்

- **பலன்கள்:** அதிக study time, Library வசதி, நண்பர்களுடன் discussion.
- **சவால்கள்:** நண்பர்கள், சத்தம் மற்றும் நேரத்தை வீணாக்கும் பழக்கங்கள்.

#### சிறந்த வழிமுறை:

- காலை 2–3 மணி நேரம் முக்கிய பாடங்களைப் படிக்கவும்.
- மாலையில் 2 மணி நேரம் study செய்யவும்.
- இரவில் Revision செய்யவும்.
- Room-ல் distraction இருந்தால் Library-ஐ பயன்படுத்தவும்.
- படிப்பில் ஆர்வமுள்ள நண்பர்களுடன் மட்டும் சேர்ந்து பயனுள்ள discussion செய்யவும்.

### அனைவருக்கும் பொதுவான வழிமுறை

- Polity: Indian Polity – M. Laxmikanth
- History: India's Struggle for Independence – Bipan Chandra
- Current Affairs: The Hindu / The Indian Express

### வெற்றிக்கான 3 Golden Rules

- ✓ தினமும் படியுங்கள் – குறைந்த நேரமாக இருந்தாலும் தவறவிடாதீர்கள்.
- ✓ வாரந்தோறும் Revision செய்யுங்கள்.
- ✓ ஒரே பாடத்திற்கு அதிகமான Sources-ஐ பின்பற்றாமல், சிறந்த ஒரு Source-ஐ தொடர்ந்து படியுங்கள்.

**இடம் எதுவாக இருந்தாலும் பரவாயில்லை; UPSC வெற்றியைத் தீர்மானிப்பது உங்கள்**
Consistency, Discipline, Hard Work!

அடுத்த மாதம் வேலை செய்து கொண்டே UPSC தேர்வுக்குத் தயாராவது எப்படி என்று பார்ப்போம்...!





# 'EACH ONE' CATCH ONE

*எழுப்புதலைப் பரவச் செய்வோர்*

**தமிழ்நாடு, ஆந்திரா, தெலங்கானா, கேரளா, கர்நாடகா, வடஇந்தியா, கிழக்கிந்தியா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களிலிருந்து சுமார் 12,000 வாலிபர்களுக்கு எழுப்புதலை பரவச்செய்வோர் முகாம் (Igniters Camp) நடத்தப்பட்டது.**

தேவன் 7 விதமான தலைமுறைகளை எழுப்பி, அவர்களை ஜெப அபிஷேகம், யுத்த அபிஷேகம், தீர்க்கதரிசன அபிஷேகம் மற்றும் சுவிசேஷ அபிஷேகத்தினால் நிரப்பி அனுப்பினார்.

பெற்றுக்கொண்ட அபிஷேகத்தை அனல்மூட்டி, மீண்டும் எழுப்புவதற்காக Refreshing Camp நடத்தப்பட்டது.

இந்த 12,000 Igniters ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் மாதத்திற்கு ஒரு ஆத்துமாவுக்காவது சுவிசேஷத்தை அறிவித்து, அவர்களை இரட்சிப்புக்குள் வழிநடத்தினால், ஒரு மாதத்தில் 12,000 ஆத்துமாக்களை கர்த்தருக்குள் வழிநடத்த முடியுமே!

- இதுவரை எந்த ஊழியம் செய்யாதவர்கள்; இனியாவது எழும்பலாமே!!
- உன் பள்ளியிலோ கல்லூரியிலோ, வேலை செய்யும் இடத்திலோ அல்லது உன்னுடைய சபையிலோ உன் சிறிய ஊழியத்தை ஆரம்பித்தால், பெரும் ஆத்தும அறுவடை உண்டாகுமே!
- உன்னிடம் அபிஷேகம் இருக்கிறது.
- உன்னிடம் ஒரு சாட்சி இருக்கிறது.
- நீ சொல்வதற்கு ஒரு நண்பன் இருக்கிறான்.




**நீ பிலிப்புவைப் போல் எழும்பினால்;
எத்தியோப்பியாவிற்கே சுவிசேஷம் போகுமே!!**



# வேதாகம களஞ்சியம்!!

வேத ஆராய்ச்சி : ஜோயல்




வேதாகமத்திலுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளை Major Prophets (5) மற்றும் Minor Prophets (12) என்று பிரிக்கலாம். அதில், இந்த மாதம் முதல் பெரிய தீர்க்கதரிசன புத்தகமான ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்தின் வரலாற்றுப் பின்னணி மற்றும் முக்கிய நிகழ்வுகளை எளிமையாக அறிந்துகொள்ளப் போகிறோம்.

வாங்க... தேவனுடைய வார்த்தையை இன்னும் ஆழமாகச் சேர்ந்து Explore பண்ணலாம்!

## ஏசாயா புத்தகத்தை 4 பகுதிகளாகப் பிரிக்கலாம்:

அதிகாரங்கள் 1–12 – எருசலேமுக்கு நியாயத்தீர்ப்பும் நம்பிக்கையும்

அதிகாரங்கள் 13–27 – எல்லா ஜாதிகளுக்கும் நியாயத்தீர்ப்பும் நம்பிக்கையும்

அதிகாரங்கள் 28–39 – எருசலேமின் எழுச்சியும் வீழ்ச்சியும்

அதிகாரங்கள் 40–66 – புதிய நம்பிக்கை!

அதிகாரங்கள் 1–12 – எருசலேமுக்கு நியாயத்தீர்ப்பும் நம்பிக்கையும்



**(அதி. 1–5)** யூதா ஜனங்கள் தேவனை விட்டு விலகி, விக்கிரக ஆராதனை செய்து, மாய்மாலமாக வாழ்ந்து, போலியான ஆராதனையைச் செய்தார்கள். அதனால் தேவன், **“நியாயத்தீர்ப்பு வரப்போகிறது”** என்று ஏசாயாவைக்கொண்டு எச்சரிக்கிறார். அதே நேரத்தில், மனந்திரும்புகிறவர்களை மன்னித்து மீட்டெடுக்கவும் வாக்குறுதி கொடுக்கிறார்!

**(அதி. 6)** ஏசாயா சிங்காசனத்தில் வீற்றிருக்கிற பரிசுத்தமான தேவனைத் தரிசிக்கிறார். அந்த அனுபவம் அவருடைய வாழ்க்கையையே மாற்றுகிறது. அதன் மூலம் அவர் தேவனுடைய தீர்க்கதரிசியாக அழைக்கப்படுகிறார்.

ஏசாயா, வரப்போகும் நியாயத்தீர்ப்பையும், அதற்குப் பிறகு வரும் நம்பிக்கையையும் அறிவிக்கிறார். **இம்மானுவேல் (அதி. 7)**, தாவீதின் வம்சத்திலிருந்து வரப்போகும் நீதியான ராஜா **(அதி. 11)** ஆகியோரைப் பற்றி முன்னறிவிக்கிறார்.

அசீரியாவாலும், பின்னர் பாபிலோனாலும் இஸ்ரவேலும் யூதாவும் கடுமையான நியாயத்தீர்ப்பைச் சந்தித்தாலும், தேவன் தம்மை உண்மையாகப் பின்பற்றும் ஒரு கூட்டத்தைக் (Remnant) காத்துக்கொள்வார்.

இறுதியில், தேவன் தமது நித்திய ராஜ்யத்தை நிறுவி, தம்முடைய இரட்சிப்பில் தமது மக்கள் சந்தோஷமாக வாழும் நாளை ஏசாயா முன்னறிவிக்கிறார் **(அதி. 9–12).**

**அதிகாரங்கள் 13–27** – எல்லா ஜாதிகளுக்கும் நியாயத்தீர்ப்பும் நம்பிக்கையும்

இந்தப் பகுதியில், தேவன் யூதாவுக்கு மட்டுமல்ல, உலக நாடுகளுக்கெல்லாம் நீதிபதியாக இருக்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறார்.

எந்த ராஜ்யமும், எந்த **Super Power-உம்** நிரந்தரமானது அல்ல. இன்று இருக்கும் பெரிய அதிகாரங்கள் நாளைக்கு இல்லாமல் போய்விடலாம். ஆனால், தேவனுடைய ராஜ்யம் மட்டும் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்.

கடைசியில், ஏசாயா ஒரு அழகான காட்சியைப் பார்க்கிறார் – புதிய எருசலேம்! அங்கே எல்லா ஜாதி, இனம், மொழியைச் சேர்ந்த மக்களும் ஒன்றாகச் சேர்ந்து ஆண்டவரை ஆராதிப்பார்கள்.

**அதிகாரங்கள் 28–39** – எருசலேமின் எழுச்சியும் வீழ்ச்சியும்

**(அதி. 28–35)** யூதா தேவனை நம்பாமல், மற்ற நாடுகளுடனான அரசியல் கூட்டணிகளை நம்பியது.

**(அதி. 36–38)** எசேக்கியா ராஜா தாழ்மையுடன் தேவனை நம்பியபோது, தேவன் அசீரியர்களிடமிருந்து அவரை அற்புதமாகக் காப்பாற்றினார்.

**(அதி. 39)** ஆனால், அதற்குப் பிறகு அவருக்குப் பெருமை வந்தது. பாபிலோனிலிருந்து இஸ்ரவேல் தேசத்தைப் பற்றி அறிந்துகொள்ள வந்தவர்களுக்கு, ராஜா அரண்மனையில் இருந்த எல்லாப் பொக்கிஷங்களையும் காட்டினார்.

அதற்கு ஏசாயா, ''இன்று நண்பனாக வந்த இந்த பாபிலோன்தான், ஒரு நாள் உன்னையும் இந்த நகரத்தையும் அழிக்கும்'' என்று தீர்க்கதரிசனம் உரைத்தார்.

சுமார் 100 ஆண்டுகளுக்குப் பிறகு, அந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியது! (2 இராஜாக்கள் 24–25)

**அதிகாரங்கள் 40–66** – புதிய நம்பிக்கை!

எருசலேம் அழிந்தாலும், கதை அங்கேயே முடிந்துவிடவில்லை.

**(அதி. 40)** சிறையிருப்பு முடிந்து, ஒரு புதிய நம்பிக்கை பிறக்கிறது.

**(அதி. 41–42)** தேவன் கோரேஸ் (Cyrus) என்ற ராஜாவை எழுப்பி, தம்முடைய ஜனங்களைச் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப் போகிறார்.

**(அதி. 48)** இஸ்ரவேல் இன்னும் கீழ்ப்படியாத நிலையில் இருந்ததால், தேவன் அவர்களைத் தம்முடைய ஊழியக்காரராகப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. ஆனாலும், தேவன் அவர்களைக் கைவிடவில்லை. அவர்களை மீண்டும் ஆசீர்வதித்து, தம்முடைய திட்டத்தை நிறைவேற்ற தொடர்ந்து செயல்பட்டார்.

**(அதி. 49–55)** ஏசாயா ''கர்த்தருடைய ஊழியக்காரர்''-ஐ அறிமுகப்படுத்துகிறார். அவர் நம்முடைய பாவங்களுக்காகப் பாடுபட்டு, நமக்குப் பதிலாக மரித்து, தேவனோடு மீண்டும் சமாதானமாக வாழும் வழியைத் திறக்கிறார்.

இந்தத் தீர்க்கதரிசனம் இயேசு கிறிஸ்துவில் முழுமையாக நிறைவேறியது.

**(அதி. 56–66)** ஏசாயா புத்தகம் ஒரு அற்புதமான நம்பிக்கையோடு முடிகிறது. தேவன் புதிய வானத்தையும் புதிய பூமியையும் உருவாக்குவார். அங்கே அநியாயம் இருக்காது; நீதியும், சமாதானமும், சந்தோஷமும் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்!

## நினைவிற்கு:

**ஏசாயா தீர்க்கதரிசனத்திலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்னவென்றால்:**

**பாவத்திற்கு தேவன் நியாயத்தீர்ப்பு கொடுக்கிறார்;**

**மனந்திரும்புகிறவர்களுக்கு இரட்சிப்பையும் நம்பிக்கையையும் தருகிறார்;**

**இறுதியில், இயேசு கிறிஸ்துவின் மூலம் தம்முடைய நித்திய ராஜ்யத்தை நிறுவுகிறார்.**

# ஜெபிக்கலாம் வாங்க



ஜெபம் : ரோனி

## அக்டோபர் 2026

◀ உலகளவில் HIV-உடன் வாழ்பவர்கள் அதிகம் உள்ள நாடுகளில் இந்தியா 2-வது இடம் வகிக்கிறது. இந்தியாவில் மகாராஷ்டிரா (**3.99 லட்சம்**) முதல் இடத்திலும், ஆந்திரப் பிரதேசம் (**3.23 லட்சம்**) இரண்டாம் இடத்திலும், கர்நாடகா (**2.91 லட்சம்**) மூன்றாம் இடத்திலும் உள்ளதாகக் கணக்கெடுப்பு கூறுகிறது. கர்நாடகாவில் 18–35 வயதினரிடையேயான HIV பதிவுகள் 2023–24-ல் 44,581 பேரிலிருந்து, 2025–26-ல் 66,606 பேராக உயர்ந்து, சுமார் 49% அதிகரித்துள்ளது. மேலும், 56,000 பேர் தங்களுக்கு HIV பாதிப்பு இருப்பது தெரியாமலேயே வாழ்வதாகக் கூறப்படுகிறது. **தவறான பாலியல் உறவுகளில் சிக்கியிருப்பவர்கள் விடுதலை பெறவும், போதைப்பொருள் பயன்பாடு மற்றும் ஒரே ஊசி அல்லது சிரிஞ்சைப் பலர் பயன்படுத்துவதன் மூலம் HIV பரவுவது தடுக்கப்படவும் ஜெபிப்போம்.**




◀ **எல் நினோ** இந்த ஆண்டின் இறுதி வரையிலும், 2027-ஆம் ஆண்டின் வசந்த காலத்தின் தொடக்கம் வரையிலும் நீடிப்பதற்கு கிட்டத்தட்ட 90% முதல் 97% வரை வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வாளர்கள் மதிப்பிடுகின்றனர். எல் நினோவினால் வெப்பநிலை அதிகரிப்பதால் கொசுக்கள் மற்றும் பிற பூச்சிகளின் இனப்பெருக்கம் அதிகரித்து, **டெங்கு, ஜிகா மற்றும் சிக்குன்குனியா** போன்ற வைரஸ் பாதிப்புகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. பருவநிலை மாற்றத்தால் கொரோனாவைவிட அதிக ஆபத்தைக் கொண்ட கடுமையான வைரஸ் பாதிப்புகளும் ஏற்படலாம் என எல் நினோ பாதிப்புகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டத்தில் உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் கூறியுள்ளார். காலநிலை மாற்றங்கள் கட்டுப்படுத்தப்படவும், நோய்த்தொற்றுகள் ஏற்படாமல் தடுக்கப்படவும் ஜெபிப்போம்.







◀ உலக அளவில், சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், பெரியவர்கள் மட்டுமல்லாமல் குழந்தைகளும் பாதிக்கப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சில் ஆய்வின்படி, இந்தியாவில் **10.1 கோடி** பேர் சர்க்கரை நோயாளிகளாகவும், **13.6 கோடி** பேர் சர்க்கரைக்கு முந்தைய நிலையிலும் உள்ளனர். தமிழ்நாட்டில் 1 கோடி பேர் சர்க்கரை நோயாலும், **80 லட்சம்** பேர் சர்க்கரைக்கு முந்தைய நிலையிலும் உள்ளனர். ஆரோக்கியமற்ற

உணவுகளை உட்கொள்வதால் உடல் பருமன் மட்டுமின்றி, குழந்தைகளுக்குக்கூட சர்க்கரை நோய் ஏற்படும் அபாயம் உள்ளது. குறைமாதப் பிறப்பு, குறைந்த பிறப்பு எடை மற்றும் மரபியல் காரணங்களாலும் சிறு வயதிலேயே சர்க்கரை நோய் ஏற்படும் அபாயம் உள்ளது. சர்க்கரை நோயினால் தீவிரமாகப் பாதிக்கப்பட்டு வரும் நம் இந்திய தேச மக்களின் ஆரோக்கியத்திற்காக ஜெபிப்போம்.

சமீபத்திய ஆய்வுகளின்படி, 12–21 வயதுடைய இளைஞர்களில் **19.2% பேரும்**, 13–17 வயதுடைய இளைஞர்களில் **64% பேரும் (சுமார் 82 லட்சம் பேர்)** மனஅழுத்தம், கவலை, கோபம் அல்லது சோகமான நேரங்களில் AI Chatbots (ChatGPT, Gemini, Meta AI, Character.AI) மூலம் ஆலோசனை பெற்றதாக ஆய்வு தெரிவிக்கிறது. இந்த விகிதம் **2024–இல் 13.1%** ஆக இருந்த நிலையில், **2025–26 ஆய்வில் 19.2% ஆக** உயர்ந்துள்ளது. **28% பேர்** தினமும் AI Chatbots-ஐப் பயன்படுத்துவதாகத் தெரிவித்துள்ளனர். AI Chatbots மருத்துவர்கள் அல்லது உளவியல் ஆலோசகர்களுக்கு மாற்றாக இல்லை என்று மனநல நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். மனஅழுத்தம் அல்லது வாழ்க்கைச் சவால்களின் நேரங்களில் AI-ஐ மட்டுமே சார்ந்து இருக்காமல், தேவனையும் நம்பகமான ஆலோசகர்களின் வழிகாட்டுதலையும் நாடும் இருதயத்தை தேவன் கொடுக்க ஜெபிப்போம்.

இந்தியாவில் 13 பெரிய துறைமுகங்களும், 200-க்கும் மேற்பட்ட சிறிய துறைமுகங்களும் உள்ளன. தமிழ்நாட்டில் **சென்னை, தூத்துக்குடி, எண்ணூர் ஆகிய 3 பெரும் துறைமுகங்கள்** உட்பட 24 துறைமுகங்கள் செயல்படுகின்றன. இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகத்தில் **சுமார் 95% சரக்கு மற்றும் 65% மதிப்பு கடல் வழியாக** நடைபெறுகிறது. சட்டவிரோதக் கடத்தல், போதைப்பொருள் வர்த்தகம் போன்ற தீமைகள் தடுக்கப்படவும், இந்திய தேசத்தின் கடலோரப் பகுதிகளில் கர்த்தருடைய ஆளுகையும் பாதுகாப்பும் உண்டாகவும் ஜெபிப்போம்.











இந்தியாவின் அனைத்து எல்லைப் பகுதிகளிலும் காணப்படும் தீவிரவாதம், ஊடுருவல், போதைப்பொருள் கடத்தல், ஆயுதக் கடத்தல் மற்றும் சட்டவிரோதச் செயல்கள் முற்றிலும் தடுக்கப்படவும், எல்லைப் பாதுகாப்புப் படையினர், இராணுவ வீரர்கள் மற்றும் பாதுகாப்புப் பணியாளர்களுக்கு தேவன் ஞானம், தைரியம், பெலன் மற்றும் பாதுகாப்பை அருளவும், அவர்கள் தங்களுடைய கடமைகளை உண்மையுடன் நிறைவேற்றவும், இந்தியாவின் எல்லைப் பகுதிகள் முழுவதும் தேவனுடைய பாதுகாப்பு நிலைத்திருக்கவும் ஜெபிப்போம்.

**2026–ஆம் ஆண்டின் கடந்த ஏழு மாதங்களில்,** கடும் வெப்பம், புயல், கனமழை, மின்னல் தாக்குதல், திடீர் வெள்ளப்பெருக்கு, நிலநடுக்கம், நிலச்சரிவு, காட்டுத்தீ போன்ற இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் அழிவுகளும் உயிரிழப்புகளும் தடுக்கப்படவும், தேவன் தேசத்தையும் மக்களையும் பாதுகாக்கவும் ஜெபிப்போம். மேலும், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஆறுதலையும் தேவையான உதவிகளையும் பெற்றுக்கொள்ளவும், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அரசு அதிகாரிகள், பேரிடர் மீட்புப் படையினர், காவல்துறையினர், தீயணைப்புத் துறையினர் மற்றும் தன்னார்வலர்களுக்கு தேவன் ஞானமும் பெலனும் அளித்து, அவர்கள் தீவிரமாகச் செயல்படவும் ஜெபிப்போம்.




## EVERY 1st SUNDAY (4th Oct)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre, Ajantha Mahal, # 3, 6th West Cross Road, Gandhi Nagar
9442885315 | 9442979556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #62, 2nd Floor, Benny Kumaran Main Road.
9442885315

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram
Land mark: South Police Station to Kamaraj College Rd.
9750955548 | 9786212103

**TIRUPATI (3PM)**
World Revival Prayer Centre, Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

## EVERY 2nd SATURDAY (10th Oct)

**DELHI (3 PM TO 5 PM)**
World Revival Prayer Centre, Plot 152, Pratap Nagar
Near Hari Nagar bus depot
New Delhi - 110064
7217663240

## EVERY 2nd SUNDAY (11th Oct)

**BANGALORE(3PM-5PM)**
World Revival Prayer Centre, 57/2 Thomasappa layout (Opp) Lumbini Garden Bus Stand Outer Ring Road, Veerannapalaya (Nagavara)
9791444788 | 080 35 45 45

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School, Opp Rly.Station
9597927799 | 9442885315

**MULUND (5PM - 7:30PM)**
Shekinah NLA Church, Vijay Nagar, Near Vani Vidyalaya School, Mulund-West
9004882470

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

**KOVILPATTI (2:30PM -5:30PM)**
St. Paul's Matriculation School (Parking area Building)
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
D. No. 5/2, Vaanjinathan Street, North side of TPV Mill, Thuththikulam Road,
9750955548 | 9965377427

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, #203, Madurai Road, Opp. Anantham Silk, Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:00PM)**
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

**CHENGALPET (3PM – 5:30PM)**
Reheboth Church,
Near old bus stand,
9710809626 |9488475315

**NAMAKKAL (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
16B Naveen Nest Apartment,
Podhigai Nagar, 1st street,
Salem Road, Namakkal-637001
9962085523 | 94886 18305

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Grace Auto, 1st floor,
163, Raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles,
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

## EVERY 3rd SATURDAY (17th Oct)

**MYSORE (3:30PM - 6PM)**
World Revival Prayer Center,
3818, 14th Cross, St. Mary's Road,
FTS Circle, N.R. Mohalla.
9962085523 | 9886311777

## EVERY 3rd SUNDAY (18th Oct)

**SALEM (3PM - 6PM)**
Karunya Prayer Hall,
76/67, Near Thinathanthi office,
opp. Gandhi Stadium, Arisipalayam
9962085523

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9047480484

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex,
1st Floor, P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

**TIRUPORUR (3 PM - 6 PM )**
Come compassion Centre,
Mettuthandalam, Tiruporur.
9710809626

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
Prince Kushal Towers,
7th Floor B-Wing,
Adjacent to LIC Metro,
Mount Road,
9488475315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram, Kadaiyam (via),
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1S.A. Rice Mill Complex,
TTP Main Rd,
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road,
Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9750955548

**PONDICHERRY (5PM TO 7PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9962085523

**CHITTOOR (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

## EVERY 4th SUNDAY (25th Oct)

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar, Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor,
305/E, Mith Chauky,
Marve Road, Malad (W)
9664050567 | 9619996976

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre, VK Road.
9442885315

**THISAYANVILAI (2:30PM - 5:30PM)**
World Revival Prayer Centre,
Near ML Hospital, Thisayanvilai.
9487810845 | 9750955548

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop] 41, K.Salai pudur
Byepass Road, Madurai
9750955548

**உங்கள் பகுதியில் நடைபெறும் Fellowshipல் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்; எழுப்புதலைப் பற்ற வைப்போர்களாய் மாறுங்கள்!**

# செய்திகள்!

## இந்தியா உள்ளிட்ட அண்டை நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தல்; நேபாளத்தின் பேரழிவுக்கு சீனா காரணமா?

## சர்வதேச நிபுணர்கள் எச்சரிக்கை!



நேபாள-சீனா எல்லைப்பகுதியில் ஏற்பட்ட கோர வெள்ளப்பெருக்கு காரணமாக, புவியியல் ரீதியாகப் பலவீனமான இமயமலைப் பகுதியில் சீனா மேற்கொண்டு வரும் பிரம்மாண்ட நீர்மின் திட்டங்கள் உலக நாடுகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளதாக சர்வதேச அளவில் கவலை எழுந்துள்ளது.

சீன எல்லைப் பகுதியையொட்டிய இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அருணாச்சலப் பிரதேசத்தில் பாயும் பிரம்மபுத்திரா நதியின் குறுக்கே, திபெத்தில் 167.8 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பீட்டில் 'மெடாக்' என்ற உலகின் மிகப்பெரிய நீர்மின் திட்ட அணையை சீனா கட்டமைத்து வருகிறது. 2030-ஆம் ஆண்டுக்குள் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ள இந்த அணை, ஆண்டிற்கு 300 பில்லியன் யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் கொண்டதுடன், புகழ்பெற்ற 'த்ரீ கோர்ஜஸ்' அணையைவிட மூன்று மடங்கு பெரியதாகும். எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் இருந்து வெறும் 30 கிலோமீட்டர் தொலைவில் அமையவுள்ள இந்த அணையால், அருணாச்சலப் பிரதேசத்திற்கு கடுமையான அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும், இது 'வெடிக்கக் காத்திருக்கும் நீர் வெடிகுண்டு' என்றும் அம்மாநில முதல்வர் பெமா காண்டு பகிரங்கமாக எச்சரித்துள்ளார். இதன் மூலம் நிலம், நீர், வான், விண்வெளி, சைபர், மின்காந்த அலைவரிசை ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக 'தண்ணீர்' என்பதைத் தனது ஏழாவது போர் வடிவமாக சீனா கையில் எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

வரும் 2030-ஆம் ஆண்டுக்குப் பின்னர், இந்தியாவுக்கு எதிராக சீனா மற்றும் பாகிஸ்தான் நாடுகள் இணைந்து ஒரே நேரத்தில் இருமுனைப் போரைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளதாக ராணுவ நிபுணர்கள் கணித்துள்ளனர். அத்தகைய சூழலில், 'மெடாக் அணையில் இருந்து திடீரெனத் தண்ணீரைத் திறந்துவிட்டு, 48 முதல் 72 மணி நேரத்திற்குள் அருணாச்சலப் பிரதேசத்தை வெள்ளத்தில் மூழ்கடித்துவிட்டு, அதே நேரத்தில் ஜம்மு-காஷ்மீர் எல்லையில் பாகிஸ்தான் மூலம் நேரடித் தாக்குதல் நடத்தப்படலாம் என அஞ்சப்படுகிறது. நவீன போர்க்களத்தின் ஏழு துறைகளில் வான்படை, விண்வெளி மற்றும் நீர்வளப் போர் ஆகிய மூன்று முக்கியப் பிரிவுகளில் இந்தியா கடும் சவால்களை எதிர்கொள்கிறது. மேலும், அண்டை நாடுகளான வங்கதேசம் மற்றும் பாகிஸ்தானுடன் சீனா தனது ராணுவப் பிணைப்பைத் தீவிரப்படுத்தி, இந்தியாவை கடல் மற்றும் நில எல்லைகள் வழியாகச் சுற்றிவளைக்கும் வியூகங்களை வகுத்து வருகிறது.

திபெத்தின் பிரம்மபுத்திரா நதியில் சீனா கட்டத் திட்டமிட்டுள்ள 'மெடாக் நீர்மின் திட்ட அணையானது, நில அதிர்வு அபாயம் நிறைந்த பிளவுப் பகுதியில் அமையவுள்ளது. மேலும், இந்தத் திட்டங்கள் குறித்த எந்தவொரு வெளிப்படையான நீரியல் புள்ளிவிவரங்களையும் பகிர்ந்துகொள்ள சீனா மறுத்து வருவதால், நதியின் கீழ்ப்பகுதியில் உள்ள இந்தியா மற்றும் வங்கதேசம் போன்ற நாடுகள் கடுமையான நீர் மேலாண்மைச் சிக்கலை எதிர்கொள்ளும் நிலை உருவாகியுள்ளது. சீனா தண்ணீரை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி, நினைத்த நேரத்தில் செயற்கை வறட்சியையோ அல்லது திடீர் பேரழிவை ஏற்படுத்தும் வெள்ளத்தையோ உருவாக்கக்கூடும் என்ற அச்சமும் தீவிரமடைந்துள்ளது. - தினமணி, ஆகஸ்ட் 29

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# அடர்ந்த காட்டின் மலர்



"மனிதனோ தேவதூதனோ ஒருபோதும் நடக்காத, பார்க்க முடியாத ஒரு தொலைதூர அடர்ந்த காட்டுக்குள், மிக நேர்த்தியான ஒரு மலரை தேவன் ஏன் நட வேண்டும்?"

**தேவன் அழகை உருவாக்குகிறார்:**
ஒவ்வொரு நன்மையும், பூரணமான ஒவ்வொரு வரமும் அவரிடமிருந்தே வருகிறது (யாக்கோபு 1:17).

**காடு அதை மறைக்கிறது:**
நம் பார்வைக்கு அப்பாற்பட்ட, அந்தரங்கமான இடங்களிலும் அவர் தமது அழகான படைப்புகளை வைக்கிறார் (ஏசாயா 45:15).

**மனிதர்கள் அதைக் காண்பதில்லை:**
நம்முடைய எல்லா செயல்களும் மனிதக் கண்களால் பார்க்கப்படுவதில்லை (மத்தேயு 6:4).

**கூட்டம் எதுவும் அதைக் கொண்டாடுவதில்லை:**
மனிதர்களிடமிருந்து கிடைக்கும் புகழ்ச்சி ஒருவருடைய மதிப்பைத் தீர்மானிப்பதில்லை (யோவான் 12:43).

**தேவன் எப்போதும் காண்கிறார்:**
அவருடைய பார்வைக்கு மறைவானது ஒன்றுமில்லை; அனைத்தும் அவருடைய கண்களுக்கு வெளிப்படையாக இருக்கின்றன (எபிரெயர் 4:13).

**தேவனுடைய பிரியமே போதுமானது:**
மனிதர்களின் பாராட்டைவிட, தேவனுடைய பிரியத்தைப் பெறுவதே மேலானது (சங்கீதம் 147:11).

**அமைதியான விசுவாசம் அவசியம்:**
கொஞ்சத்தில் உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருப்பான் (லூக்கா 16:10).

**தேவனே நம்முடைய பார்வையாளர்:**
மனிதர்களுக்காக அல்ல, கர்த்தருக்கென்றே உண்மையோடு வாழுங்கள் (கொலோசெயர் 3:23).

மனிதர்களின் பார்வைக்கு மறைந்திருந்தாலும்,
தேவனுடைய கண்களுக்கு நாம் ஒருபோதும் மறைவானவர்கள் அல்ல.

எனவே, புகழுக்காக அல்ல; தேவனுடைய பிரியத்திற்காக
உண்மையோடு செயல்படுவோம்.

Registered under the press and
Registration of Periodicals Act, 2023: TNBIL/2010/32847

